# திருக்கல்யாணத்தாய்

மலர் : 6 இதழ் :3 மார்ச் 2015

(தனிச்சுற்றுக்கு மட்டும்)

thirukalyanamata.com



# திருக்கல்யாணத் தாய்

www. thirukalyanamatha.com தொலைபேசி : 04639 - 261230

kalyanamatha@gmail.com



ஆசிரியர் & வெளியிடுபவர்

அருட்திரு முனைவர் R. **ஜோசப் ரவிபாலன்**

**ஆலோசகர் குழு**
அருட்திரு ஜாண் போஸ்கோ
அருட்திருசிலுவை தங்கம்
அருட்திரு டென்சில் ராஜா
அருட்திரு ஜோசப் ஸ்டார்லின்
அருட்திரு ஜோசப் பாக்கியராஜா
அருட்சகோதரி புளோரா

**ஆசிரியர் குழு**
அருட்திரு பிரான்சிஸ் வசந்தன்
அருட் சகோதரி மைக்கிள்
திரு. ஜெயசீலன் அந்தோணிராஜ்
திரு. அந்தோணி ஜெயராஜ்
திரு. பெலிக்ஸ் அந்தோனி
திரு. ஜோசப் ததேயூஸ் ராஜா
திருமதி. ரெவின்யூஸ் ராணி
திரு. மெசியாஸ்



**தொடர்பு முகவரி**
திருத்தல அதிபர்
திருக்கல்யாணத்தாய் திருத்தலம்
பொத்தக்காலன்விளை 628 702
தூத்துக்குடி மாவட்டம், தமிழ்நாடு
தொலைபேசி : 04639 - 261230



**விளம்பரம் செய்ய தொடர்புக்கு...**
திருத்தலக்கடை : 04639 -261330
திருத்தல அலுவலகம் : 04639 -261430


## மலரின் உள்ளே...


| | |
|---|---|
| ஆசிரியரின் அருளுரை | 1 |
| திருப்பாடல்கள் 7 | 5 |
| சிற்பி | 9 |
| உண்மை கிறிஸ்தவன் | 12 |
| திருச்சபைச் செய்திகள் | 13 |
| அறிவிப்பு | 16 |
| அற்புதங்கள சாட்சிகள் | 19 |
| எனது கிராமம் | 22 |
| உண்ணா நோன்பு | 25 |
| அந்த 40 நாட்கள் | 28 |
| வாழ்வு தரும் வார்த்தைகள் | 31 |
| விவிலிய வினா விடை | 32 |



வாங்கிவிட்டீர்களா !

**திருக்கல்யாணத்தாய் மாத இதழ்**

சந்தா செலுத்தி உறுப்பினர்களாகச் சேர்ந்து பயன் பெறுங்கள்

உங்களுக்காக ஜெபிக்கிறோம். ஆண்டு சந்தா ரூ. 100

விளம்பரம் முழுபக்கம் கருப்பு வெள்ளை - ரூ 1000, கலர் - ரூ 3000



# ஆசிரியரின் அருளுரை

இயேசுவில் அன்புக்குரியவர்களே! திருக்கல்யாணத் தாயின் அருமையான பிள்ளைகளே! பொதுவாக மார்ச் மாதத்தில் தவக்காலத்தை நாம் அனுசரிப்போம். இயேசுவின் உயிர்ப்பைக் கொண்டாடி மகிழ்வதற்காக நம்மைத் ஆன்மீக வழியில் தயாரிப்பதற்காக தவக்காலம் இறைவனின் கொடையாக நமக்கு அமைந்துள்ளது என்று சொன்னால் அதை மறுப்பாரில்லை, தவக்காலத்தின்போது இயேசுவின் பாடுகளைப் பற்றிச் சிந்தித்து, அவரது பாடுகள் மற்றும சிலுவைச்சாவு நமக்கு எந்த வழிகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன என்பதை அறிந்து அதன் அடிப்படையில், நம்முடைய வாழ்க்கைப் பயணத்தை மாற்றிக் கொள்வதற்கு கடவுள் நமக்கு அழைப்பு விடுப்பதை மனதில் வைத்துக்கொள்ள வேண்டும்.

தவக்காலம் குறித்து பல கருத்துகள் இருக்கின்றன. இலத்தீன் மொழியில் இயேசுவின் உயிர்ப்பின் பெருவிழாவுக்கு முன் நாற்பதாம் நாளைக் குறிக்கும் விதத்தில் 'நாற்பதாம்' என்கிற பொருள் கொண்ட 'குவாதராகெசிமா' (Quadragesima) என்கிற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. அதே அர்த்தத்தில் கிரேக்க மொழியில் 'சாராகோஸ்ற்றே' (Sarakoste) என்கிற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். ஆங்கில மொழியில் 'வசந்த காலம்' (இளவேனிற்காலம்) என்கிற அர்த்தம் கொண்ட 'Lent' என்கிற சொல் பயன்படுத்தப் படுகிறது. இந்த ஆங்கில வார்த்தை ஜெர்மன் மொழியில் பயன்படுத்தப்படும் 'லெண்ட்ஸ்' (Lenz) மற்றும் 'லென்றெ' (Lente) என்கிற டச்சு மொழி வார்த்தையிலிருந்து எடுக்கப்பட்டுள்ளது. ஜெர்மன் மற்றும் டச்சு மொழிகள் உபயோகிக்கும் வார்த்தைகள் 'நீண்ட' என்கிற அர்த்தத்தைக் கொடுக்கின்றன்றன. வசந்த காலத்தில் இரவைவிட நாள் நீளமானது. உயிர்ப்புப் பெருவிழா வசந்த காலத்தில் கொண்டாடப்படுவதால் 'நீண்ட' என்கிற பொருளில் முதலில் பயன்படுத்தப்பட்டதாக அறிய வருகிறோம்.

கிறிஸ்தவத்தின் வெவ்வேறு சபைகள் நாற்பது நாள்களை வெவ்வேறு முறையில் கணக்கிடுகின்றன. ஆங்கிலிக்கன் திருச்சபை, லூத்தரன் திருச்சபை, மெத்தோடிஸ்ட் திருச்சபை போன்ற சபைகள் கீழ்க்கண்டவாறு நாள்களைக் கணக்கிடுவதாக அறிகிறோம். விபூதிப் புதன் முதல் புனித (பெரிய) சனி வரை மொத்தம் நாற்பத்தாறு நாள்கள். இடையில் வரும் ஆறு ஞாயிற்றுக் கிழமைகளை நீக்கினால் நாள்களின் மொத்த எண்ணிக்கை நாற்பது மட்டும்தான்.

உரோமை வழிபாட்டு முறையின் அடிப்படையில், தவக்காலம் என்கிற வழிபாட்டின் காலம் பின்வருமாறு விளக்கப்படுகிறது. விபூதிப் புதன் தொடங்கி பெரிய வியாழன் (அன்று மாலை நடைபெறும் ஆண்டவரின் திருவிருந்து நிகழ்வு சேர்த்துக்கொள்ளப்படாமல்!) வரை மொத்தம் நாற்பத்து நான்கு வழிபாட்டு நாள்கள்

வருகின்றன. (யூதர்கள் நாள்களைக் கணக்கிடுவதின் அடிப்படையில் பார்த்தால் பெரிய வியாழன் அன்று மாலையில் நிகழும் ஆண்டவரின் திருவிருந்து வெள்ளிக்கிழமை நிகழ்வாகக் கருதப்படுகிறது. யூதர்களின் பாரம்பரியத்தில் மாலை ஆறு மணிக்கே மறுநாள் தொடங்கி விடுகிறது). ஆகவே நாற்பத்து நான்கு நாள்கள் என்பது ஆன்மீக நோக்கத்திற்காக தோராயக் கணக்கில் நாற்பது நாள்கள் என்று எடுத்துக் கொள்ளப்படுகிறது. அதாவது, இயேசு கிறிஸ்து மேற்கொண்ட நாற்பது நாள் நோன்பை அடிப்படையாகக் கொண்டு தவக்காலமும் நாற்பது நாள்கள் கொண்டதாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. மேலும், இடையில் வருகிற ஆறு ஞாயிற்றுக் கிழமைகளை நீக்கி, விபூதிப் புதன் தொடங்கி பெரிய சனி வரை மொத்த நாள்களின் எண்ணிக்கை நாற்பது. புனித அம்புரோஸிய வழிபாட்டு முறையின் அடிப்படையில், தவக்காலம் விபூதிப் புதனைத் தொடர்ந்து வருகிற ஞாயிற்றுக்கிழமையிலிருந்து ஆண்டவரின் திருவிருந்து நிகழ்வு நீங்கலாக பெரிய வியாழன் வரை என்று கணிக்கப்படுகிறது. அந்தக் கணிப்பின்படி, தவக்காலத்தில் மொத்தம் நாற்பது நாள்கள்தான் உள்ளன.

தவக்காலத்தின்போது இயேசுவின் பாடுகள், அவரது சிலுவைச் சாவு மற்றும் அவரது உடல் உயிர்ப்பு ஆகியவை நீங்கலாக, நம் மனதில் அடிக்கடி எழுகின்ற எண்ணங்கள் செபம் மற்றும் நோன்பு பற்றியதாகத்தான் இருக்கும் என்று எளிதில் சொல்லிவிடலாம். யூதர்களின் சமயப் பாரம்பரியத்தில் செபம் (மன்றாட்டு), நோன்பு (உபவாசம்), ஈகை (தர்மம்) ஆகிய மூன்று முக்கியமான நற்செயல்கள் வலியுறுத்தப் படுகின்றன. இம்மூன்று நற்செயல்களை கிறிஸ்தவமும் போற்றுகின்றது. இந்த மூன்று முக்கியமான நற்செயல்கள் குறித்து பழைய ஏற்பாட்டில் ஒரே இடத்தில் அல்லது ஒரே பகுதியில் சேர்த்துத் தரப்படவில்லை. இவற்றைப் பற்றியக் குறிப்புக்கள் ஆங்காங்கே கூறப்பட்டுள்ளன. அதனால் அவை முக்கியத்துவம் பெற்றிருக்கவில்லை என்று சொல்வது சரியல்ல.

**முதலாவதாக**, செபம் அல்லது இறைவேண்டல் குறித்து என்ன கூறப்பட்டுள்ளது? "நான் படுத்திருக்கையில் உம்மை நினைப்பேன்; இரா விழிப்புகளில் உம்மைப் பற்றியே ஆழ்ந்து சிந்திப்பேன்" என்று திருப்பாடலாசிரியர் கூறுகிறார் (திபா 63:6). யூதர்கள் காலையிலும் மாலையிலும் 'ஷேமா இஸ்ரயேல்' ('இஸ்ரயேலே கேள்') என்கிற பழம்பெரும் செபத்தைச் சொல்வர். அந்த செபம் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது. மூன்று இடங்களிலிருந்து அது எடுக்கப்பட்டுள்ளது (இச 6:4-9; 11:13-21; எண் 15:37-41). தொடக்கக்காலத்தில் இந்த செபம் இச 6:4 என்கிற ஒரேயொரு வாக்கியத்தை மட்டும் கொண்டிருந்தது. மூன்று பகுதிகளைக் கொண்டுள்ள இந்த செபம் யூத நம்பிக்கையின் முக்கியமான அம்சங்களை வெளிப்படுத்துகிறது. எதற்காக இந்த செபம் காலையிலும் மாலையிலும் செபிக்கப்பட்டது? ஒவ்வொரு நபரும் தனக்கும் கடவுளின் அரசுக்கும் இடையே நிலவுகிற நெருங்கிய உறவை நினைத்து மகிழ்ந்து

கொண்டாடவும், அந்த உறவினை இன்னும் உறுதியாக்கிக்கொள்ளவும் இந்த செபம் செபிக்கப்பட்டது என்று யூதர்களின் சட்ட விளக்க நூலாகிய 'மிஷ்னா' கூறுகிறது. இந்த செபத்தைச் செபிப்பதின் மூலம் விண்ணக அரசினை அவர்கள் ஏற்றுக்கொள்வதாக நாம் புரிந்துகொள்கிறோம். மோசே மூலம் கடவுள் அருளிய பத்துக் கட்டளைகளின் சாராம்சத்தை இந்த செபம் கொண்டுள்ளது என்று 'தால்மூது' என்கிற யூதர்களின் பிற்காலத்து சட்ட விளக்க நூல் கூறுகிறது. மேலும், இந்த செபம் செபிக்கப்படும்போது, இதில் அடங்கியுள்ள உண்மைச் செய்திக்கு செபிப்பவரே சாட்சியம் அளிக்கின்றார் என்றும் புரிந்துகொள்ளப்படுகிறது.

**இரண்டாவதாக**, உபவாசம் அல்லது நோன்பு. கடவுள் மோசே மூலம் இஸ்ரயேல் மக்களுக்குச் சட்டத்தை வழங்கியபோது, அவர்கள் ஆண்டுக்கு ஒருமுறை நோன்பு அனுசரிக்க வேண்டும் என்று கட்டளையிட்டார். 'திஷ்ரி' (Tishri) என்கிற யூதர்களின் பஞ்சாக்கத்தின் ஏழாம் மாதம் பத்தாம் நாள் ஒவ்வொருவரும் நோன்பு இருக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது (லேவி 16:29,31; 23: 26,32; எண் 29:7). அந்த நாளில்தான் இஸ்ரயேல் மக்கள் பாவக்கழுவாய் நிறைவேற்றுவர் (லேவி 16; 23:26-32; எண் 29:7-11). அதே நாளில்தான் ஒவ்வோர் ஐம்பதாம் ஆண்டும் யூபிலி கொண்டாடப்பட வேண்டும் (லேவி 25:8-10) என்று கடவுள் கட்டளையிட்டார். தொடக்கத்தில் ஆண்டிற்கு ஒருமுறைதான் கட்டாய நோன்பு இஸ்ரயேல் மக்களால் அனுசரிக்கப்பட்டது. ஆனால் பிற்காலத்தில், மறைநூல் அறிஞர்கள் வாரத்திற்கு இருமுறை நோன்பை கட்டாயமாக்கினார்கள் (காண்க. லூக் 18:12). இயேசு கிறிஸ்து நிச்சயமாக அதை ஏற்கவில்லை என்பதுதான் உண்மை. நோன்பு என்றால் என்ன? இறைவனின் முன்னிலையில் செபத்தையும் தாழ்ச்சியையும் அடையாள முறையில் உணர்த்தும் செயல்தான் நோன்பு என்று அறியப்படுகிறது. எதற்காக பழைய ஏற்பாட்டுக்கால மக்கள் நோன்பை அனுசரித்தனர்? வெவ்வேறு நோக்கங்களுக்காக அவர்கள் நோன்பு இருந்ததாக விவிலியம் நமக்குச் சான்று கூறுகிறது: 1. பாவங்களுக்கு மனத்துயர் அடைவதை வெளிப்படுத்துவதற்காக (1சாமு 7:6; யோவே 1:14; யோனா 3:5-9); 2. பாவங்களிலிருந்து கடவுள் தங்களை விடுவித்ததை நினைவு கூர்வதற்காக (செக் 8:19); 3. பேராபத்து மற்றும் அழிவு நேரங்களில் இறைவனிடம் மன்றாடுவதற்காக (எஸ்ரா 8:21-23; 2 குறி 20:3-4); 4. இறந்தவர்களுக்காக துக்கம் அனுசரிப்பதற்காக (2 சாமு 1:11-12; 1 சாமு 31:13); முக்கியமான ஒரு காரியத்தை ஆற்றுவதற்குமுன் (1 சாமு 14:24). தம் பணிவாழ்வில் ஈடுபடுவதற்குமுன் இயேசு பாலை நிலத்தில் நாற்பது நாட்களாக உண்ணா நோன்பு இருந்தார் (மத் 4:1, 2). மொத்தத்தில், நோன்பின் மூலம் ஒருவர் கடவுளிடம் நெருங்கி வருகிறார் என்றறிகிறோம். தன்னை முழுவதும் கட்டுப்படுத்தி, தன் முழு கவனத்தையும் கடவுளின் பக்கம் திருப்பிக்கொள்வதற்கு வேண்டிய மனவலிமையையும், ஆற்றலையும் நோன்பின் மூலம் ஒருவர் பெற்றுக்கொள்கிறார். தனது சக்தியையெல்லாம் ஒன்றுபடுத்தி, கடவுளுடன் ஐக்கியமாகும் நிலைக்கு அவர் உயர்கிறார்.

**மூன்றாவதாக**, ஈகை அல்லது தர்மம். தர்மம் செய்தல், ஏழைகளுக்கு உதவிக்கரம் நீட்டுதல் ஆகிய நற்செயல்கள் குறித்து பழைய ஏற்பாடு தெளிவாக எடுத்துரைக்கிறது. "உனது நாட்டில் ஏழைகள் என்றும் இருப்பர். எனவே நான் உனக்குக் கட்டளையிட்டுச் சொல்கிறேன்: உன் சகோதரனுக்கும், உன் நாட்டிலுள்ள


வறியவர்க்கும், தேவையுள்ளோருக்கும் உன் கையைத் தாராளமாய்த் திற" (இச 15:11) என்று மோசே மூலம் கடவுள் மக்களுக்கு அறிவித்துள்ளார். ஏழைகள் மீது அக்கறை கரிசனை கொண்டு அவர்களின் நல் வாழ்விற்காக ஒவ்வொருவரும் உதவ வேண்டும் என்கிற படிப்பினையை கடவுள் தெளிவாக்கியிருக்கிறார். மேலும் "உங்கள் நாட்டில் நீங்கள் அறுவடை செய்யும்போது உங்கள் வயலோரத்தில் இருப்பதை முற்றிலும் அறுத்து விடாமலும் சிந்திக்கிடக்கும் கதிர்களைப் பொறுக்காமலும் இருங்கள். அவற்றை எளியவருக்கும் அன்னியருக்கும் விட்டுவிடுங்கள்," (லேவி 23:22; இச 24:19-22) என்றும் கடவுள் அறிவுறுத்துகிறார்.

ஈகை அல்லது தர்மம் இல்லையெனில் செபமும், நோன்பும் பொருளற்றதாகிவிடும். "ஈகை இல்லாத நோன்பு நோன்பே அல்ல என்று புனித ஜான் கிறிசோஸ்தம் கூறுகிறார். "ஏழைகளுக்கு உணவு வழங்குவதற்காகத்தான் நோன்பு அனுசரிக்கப்படுகிறது என்பது விவிலிய அறிஞர் ஓரிஜன் முன்வைக்கும் கருத்து. செபத்தின் மூலம் கடவுளுடன் நெருங்கியத் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டு, நம்மை முற்றிலும் கட்டுப்படுத்திக்கொண்டு, அதனால் கிடைப்பதை ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுப்பதுதான் உண்மையான ஆன்மீகம் என்பது பழைய ஏற்பாட்டுப் படிப்பினை என்று கூறுவதில் தயக்கம் தேவையில்லை.

செபம், நோன்பு மற்றும் ஈகை ஆகிய மூன்று முக்கிய ஆன்மீகச் செயல்களை இயேசுவும் வலியுறுத்தியிருக்கிறார். மறைநூல் அறிஞர்கள் மக்கள்மீது சுமையைச் சுமத்தும் விதத்தில் பலவிதமான சட்டங்களை வகுத்துக் கொடுத்தனர். அவற்றுள் ஒன்று நோன்பு. ஆனால் இயேசுவின் அணுகுமுறை வேறு. பரிசேயர்களும், மறைநூல் அறிஞர்களும் மக்கள் மீது சட்டங்களை சுமையாக ஏற்றியதுபோல இயேசு செய்யவில்லை. மலைப்பொழிவில் இயேசு செபத்தைப் பற்றியும், நோன்பு இருப்பது குறித்தும், தர்மம் செய்யும் முறை பற்றியும் அழகாக விளக்கியுள்ளார் (மத் 6:1-18). மற்றவர்கள் பார்த்து புகழ வேண்டும் என்கிற நோக்கத்தில் செபிக்க வேண்டாம் என்றும், இரகசியமாக தந்தையாகிய இறைவனிடத்தில் நம் செபத்தின் மூலம் உள்ளத்தைத் திறந்துகாட்ட வேண்டும் என்றும் கூறியிருக்கிறார். நோன்பு இருக்கும்போது முகவாட்டத்தோடு, மற்றவர்களைக் கவரும் விதத்தில் இருக்காமல் கடவுள் ஒருவர் மட்டும் அறியும் விதத்தில் இருக்க வேண்டும் என்று அறிவுரை வழங்கியிருக்கிறார். தர்மம் செய்யும்போது பிறர் தெரிந்துகொள்ளும் விதத்தில் செய்யாமல் இரகசியமாகச் செய்யவேண்டும் என்றும் தெளிவாக்கியிருக்கிறார்.

தவக்காலத்தை அனுசரித்துக்கொண்டிருக்கும் நாம் இக்காலத்தை கடவுள் நமக்கு அருளியுள்ளக் கொடையாக ஏற்றுக்கொண்டு, உயிர்ப்பின் பெருவிழாவை மகிழ்ச்சியுடன் கொண்டாட நம்மை நல்ல முறையில் தயாரிக்க வேண்டும். இயேசு நமக்கு வெளிப்படுத்தியுள்ள விதத்தில், திருச்சபை நமக்கு வழங்கும் வழிகாட்டுதலைப் புரிந்துகொண்டு, மூன்று முக்கிய நற்செயல்களான செபம், நோன்பு மற்றும் ஈகை ஆகியவற்றை மிகச் சிறப்பான முறையில் நிறைவேற்றி, இறைவனுக்கு உகந்தவர்களாய் வாழ முற்படுவோமாக!

– அருட்திரு முனைவர் **R.ஜோசப் ரவிபாலன்**
**திருத்தல அதிபர்**
திருக்கல்யாணமாதா திருத்தலம், பொத்தக்காலன்விளை.



# திருப்பாடல் 7

அருட்திரு முனைவர் R.ஜோசப் ரவிபாலன்

திருப்பாடல் ஏழு தனியாரின் புலம்பல்வகைப் பாடலாகும். இதை "ஒருவரின் மாசற்றத் தன்மையை எடுத்தியம்பும் திருப்பாடல்" என்றும் "அநியாயமாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஒருவரின் செபம்" என்றும் சொல்லலாம். தாவீது அரசர் தனக்கு நேர்ந்த ஒரு துன்பத்தின் சூழலில் கடவுளை நோக்கி எழுப்பியப் புலம்பல்தான் இத்திருப்பாடல் என்கிற ஒரு கருத்து இருக்கிறது. இந்தத் திருப்பாடலுக்கும் ஆறாம் திருப்பாடலுக்குமிடையே தொடர்பு இருக்கிறது. ஆறாம் திருப்பாடலில் திருப்பாடலாசிரியர் கடவுளின் சினம் தன்னைவிட்டு அகன்று போகட்டும் என்று புலம்பி அழுகிறார் (திபா 6:1). ஆனால் ஏழாம் திருப்பாடலில், ஆசிரியர் தனக்கு எதிராக வெகுண்டெழுகின்ற பகைவரின் சீற்றத்தை அடக்குவதற்கு கடவுள் சினத்துடன் எழுந்து வரவேண்டும் என்று புலம்பி வேண்டுவதாக அமைந்துள்ளது திபா 7:6). "என்னைக் காப்பாற்றித் தப்புவியும்" (திபா 7:1) என்கிற மன்றாட்டு "ஆண்டவரே, திரும்பும் என் உயிரைக் காப்பாற்றும், உமது பேரன்பை முன்னிட்டு என்னை மீட்டருளும்" (திபா 6:4) என்கிற மன்றாட்டை ஒத்திருக்கிறது. 'எனக்கு நீதி அருள்கின்ற கடவுள்' (திபா 4:1) மற்றும் 'கடவுளின் நீதி' (திபா 5:8) ஆகிய கருத்துக்களின் தொடர்ச்சி ஏழாம் திருப்பாடலில் காணப்படுவதை அறிகிறோம் (காண்க. திபா 7:8,17). இந்தத் திருப்பாடலில் "கடவுள் நடுநிலை தவறாத நீதிபதி; நாள்தோறும் அநீதியைப் பொறுத்துக் கொள்ளாத இறைவன்" என்று கொடுக்கப்பட்டுள்ளது (திபா 7:11). இதே கருத்து திபா 5:4இலும் இருப்பதைக் காணலாம் ("நீர் பொல்லாங்கைப் பார்த்து மகிழும் இறைவன் இல்லை; உமது முன்னிலையில் தீமைக்கு இடமில்லை).

இந்தத் திருப்பாடலின் எபிரேயத் தலைப்பு இதை ஒரு 'ஷிகையோன்' என்று கூறுகிறது. இதே வார்த்தை அபக்கூக்கு இறைவாக்கினர் நூலில் 'ஷிகியோனோத்' என்று பன்மையில் கொடுக்கப்பட்டுள்ளது (அப 3:1). 'ஷிகையோன்' என்கிற எபிரேயச் சொல் இந்தத் திருப்பாடலின் தலைப்பில் மட்டும்தான் வருகிறது. இதன் பொருள் என்ன? இதன் சரியான அர்த்தத்தை தற்காலத்தில் யாராலும் எளிதில் சொல்ல முடியவில்லை. இது ஒரு வகையான இசையைக் குறிக்கலாம் அல்லது ஒரு வகையான கவிதையைக் குறிக்கலாம். இதை ஒரு சோகக் கவிதை எனலாம். அல்லது, மிகவும் பெருந்துன்பத்தில் தவிக்கிற வேளையில் உணர்ச்சியோடு பாடும் பாடல் எனலாம். இது ஒரு தாவீதின் பாடல். பென்யமினியனான (அதாவது, பென்யமின் குலத்தைச் சார்ந்தவனான) கூசின் வார்த்தைகளைக் கேட்டு, ஆண்டவரை நோக்கி தாவீது பாடிய பாடல் என்று எபிரேயத் தலைப்பில் பார்க்கிறோம். கூசியன் என்றால் எத்தியோப்பிய நாட்டைச் சேர்ந்தவன். கூசியன் என்றவுடன் நம் நினைவுக்கு வருவது தாவீதுக்கு எதிராக எழுந்த அவரது மகன் அப்சலோம் போர்க்களத்தில் கொல்லப்பட்டச் செய்தியை தாவீதிடம், சொல்வதற்காக தாவீதின் படைத் தளபதி யோவாபு அனுப்பி வைத்த தூதுவன் (2 சாமு 18:21-33). ஆனால் பென்யமினியன் என்றால் தாவீதின் எதிரி என்று அர்த்தமாகிறது. காரணம், தாவீதின் மீது பொறாமைக் கொண்டு அவரைக் கொல்வதற்கு முயன்ற சவுல் அரசர் பென்யமின் குலத்தைச் சேர்ந்தவர்.

ஏழாம் திருப்பாடலை உற்று ஆராயும்போது, கொடூரமான ஒரு எதிரியிடமிருந்து தன்னைக் காத்தருளுமாறு கடவுளை நோக்கி எழுப்புகிற ஒரு புலம்பலாகத் தெரிகிறது. புலம்பல் என்றாலே செபம் தானே! கடவுள் மீது நம்பிக்கையை வெளிப்படுத்தி, இப்பாடல் தொடங்கப்பட்டுள்ளது (இவா 1). இப்பாடலின் தொடக்கத்தில் புலம்பலாகவும், இடையில் எதிரிகளைச் சபிப்பதாகவும் (இவா 12ஆ-16), இறுதியில் கடவுள் வழங்கும் நீதிக்காக நன்றி கூறுவதாயும் அமைந்துள்ளது (இவா 17).

இப்பாடலை ஐந்து பகுதிகளாகப் பிரிக்கலாம்: 1. தான் விடுவிக்கப்பட வேண்டுமென்று ஆண்டவரிடம் விண்ணப்பம் (இவா 1-2); 2. தன்னுடைய குற்றமற்ற நிலையை ஆண்டவரிடம் ஆணையிட்டு எடுத்துக் கூறல் (இவா 3-5); 3. நீதியைப் பெற்றுத்தர ஆண்டவரின் குறுக்கீட்டிற்காக வேண்டுதல் (இவா 6-9); 4. கடவுள் தரும் அடைக்கலத்தில் நம்பிக்கை (இவா 10-13); 5. நீதி கிடைக்கும் என்கிற மகிழ்ச்சியும், நீதி வழங்கும் ஆண்டவருக்கு நன்றி வழங்குவதும் (இவா 14-17).

**முதல் பகுதியில்**, ஆசிரியர் தனது எதிரிகளின் முன்னிலையில் தன்னுடைய இயலாமையைச் சுட்டிக்காட்டி, தனக்கு ஆதரவாக கடவுள் வந்து தன்னை விடுவிக்க வேண்டும் என்று விண்ணப்பிப்பதைக் காணலாம். குற்றமற்ற மாசற்ற நிலையில் இருக்கக்கூடிய ஒருவரை அவருடைய எதிரிகள் வலுக்கட்டாயமாக நீதிமன்றத்திற்கு இழுத்து வந்து, அவருக்கெதிராக குற்றப்பழி சுமத்துகிற வேளையில், மேல் முறையீடு செய்வதற்காக பெரிய நீதிமன்றத்தை, அதாவது, ஆண்டவரை நாடுகிறார். மானிடச் சமுதாயத்தில் நீதி மறுக்கப்படுகிறபோது, முறையீடு செய்வதற்காக, பாதிக்கப்படுகிற நபர் ஆண்டவர் ஒருவரை மட்டும்தான் தேடுகிறார். உலகமே ஒருவரை வெறுத்து ஒதுக்கும்போது, பாதிக்கப்படுகிறவர் கடவுள் ஒருவரிடம்தான் தன்னுடைய பிரச்சினைகளுக்கு பதில் தேடுகிறார். இல்லையென்றால் எதிரிகளின் தாக்குதல் மிகக் கொடூரமாக இருக்கும். கடவுளை மறப்போர் பீறிப் போடப்படுவர் என்றும், அவர்களை யாரும் விடுவித்துவிட முன்வரமாட்டார்கள் என்றும் திபா 50:22 கூறுகிறது. 'பீறிக் கிழித்துப் போடுவார்கள்' என்று பாடலாசிரியர் இங்கே கூறுகிறபோது, அவரை எதிர் நின்ற ஆபத்தின் வேகத்தை நாம் புரிந்து கொள்ளலாம். ஆபத்தின் பாதிப்பு ஒரு நபரின் தொண்டையை சிங்கம் கடித்துக் குதறுவதைவிட (காண்க. திபா 17:10; 22:14) கொடூரமாக இருக்கலாம்.

**இரண்டாம் பகுதியில்**, ஆசிரியர் தனது குற்றமற்ற நிலையை ஆண்டவரிடம் ஆணையிட்டுக் கூறுவதாகப் பார்க்கிறோம். நிபந்தனைகளை எடுத்துக்கூறி தன் எதிரியிடம் ஆசிரியர் சரணடைவது போன்ற ஒரு சூழ்நிலையை இங்கே நாம் காணலாம். இத்தியர்கள் (இஸ்ரயேலருடன் பழைய காலத்தில் தொடர்பு கொண்டிருந்த ஓரினம். பெத்சபேயின் கணவன் உரியா ஓர் இத்தியன்) உலகிற்கு அறிமுகம் செய்த உடன்படிக்கையில், மிகக் குறிப்பாக, ஒரு பேரரசருக்கும், ஒரு குறுநில மன்னருக்குமிடையே ஏற்படும் உடன்படிக்கையில், பேரரசர் விதிக்கும் நிபந்தனைகளுக்கு குறுநில மன்னர் கட்டுப்பட வேண்டும். இல்லையெனில், பேரரசர் குறுநில மன்னரைத் தண்டிப்பார் அல்லது கொன்றொழிப்பார். திருப்பாடலின் இநதப் பகுதி ஒரு குறுநில மன்னர் தன்னிடம் கோபத்துடன் இருக்கும் பேரரசரிடம் தன்னிலை விளக்கம் கொடுத்து, குற்றமற்ற தன் நிலையை எடுத்துக்கூறி, அவரது கோபத்தைத் தணிக்க முயற்சிப்பதுபோல இருக்கிறது. தான் குற்றமற்றவன் என்றும், குற்றம் செய்திருந்தால் தான் தண்டனையை அனுபவிக்கத் தயாராக இருப்பதுபோல ஆசிரியர் கூறுகிறார் என்று எடுத்துக்கொள்ளலாம்.

**மூன்றாம் பகுதியில்**, தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்பதை ஆண்டவரிடம் எடுத்துச் சொல்லி, அநீதியின் பிடியிலிருந்து தான் பாதுகாக்கப்பட வேண்டுமாயின், ஆண்டவரின் குறுக்கீடு நிச்சயமாக அவசியமாகிறது என்பதை ஆசிரியர் கூறி மன்றாடுகிறார். கடவுளால் மட்டும்தான் இவ்வுலகில் நீதியை நிலைநாட்ட முடியும் என்றும், அநீதியின் காரணமாக துன்பத்துக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் தன்னை கடவுள் காப்பாற்ற ஓடோடி வரவேண்டும் என்று ஆசிரியர் புலம்பி மன்றாடுகிறார். உலகில் வாழும் எல்லா மக்களினங்களும் கடவுளின் ஆட்சிக்கு உட்பட்டவை என்றும்,

எல்லாருக்கும் நீதி வழங்குபவர் கடவுள் ஒருவரே என்றும் ஆசிரியர் கடவுளிடம் எடுத்துச் சொல்கிறார். உலகமனைத்தையும் தம்முடைய கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் கடவுள் தீயவர்களை அழிக்கும் சக்தி படைத்தவர் என்றும், எந்தச் சூழ்நிலையிலும் நல்லவர்களை அவர் ஒருவரால்தான் காப்பாற்ற முடியும் என்கிற அடிப்படை நம்பிக்கையை ஆசிரியர் வெளிப்படுத்துகிறார். மானிடரின் எண்ணங்களையும் விருப்பங்களையும் கடவுள் நன்கறிகிறார். இந்தக் கருத்தை எரேமியா இறைவாக்கினரும் வலியுறுத்துகிறார் (எரே 11:20).ஆண்டவரிடம் விண்ணப்பத்தை வழங்குகிறபோது, "என்னைக் காப்பாற்றித் தப்புவியும்" (இவா 1) என்றும், "எனக்குத் தீர்ப்பளியும்" (இவா 8) என்றும் ஆசிரியர் கூறுகிறார். இதுவரை தனிப்பட்ட முறையில் தனது பிரச்சினையைப் பற்றி ஆசிரியர் ஆண்டவரிடம் சொல்லிப் புலம்புகிறார்.

**நான்காம் பகுதியில்,** இங்கே கடவுள் அடைக்கலம் தருவார் என்றும், ஆபத்திலிருந்து காக்க வல்லவர் என்கிற நம்பிக்கையை ஆசிரியர் வெளியிடுகிறார். தனக்கு ஒரு கேடயமாக கடவுள் திகழ்கிறார் என்பதை ஆசிரியர் ஏற்றுக்கொள்கிறார். நல்லவர்கள், நீதியை விரும்புகிறவர்கள், நேர்மையுடன் வாழ்பவர்கள் எதைப் பற்றியும், யாரைப் பற்றியும் கவலைகொள்ள வேண்டியதில்லை. நீதியை நிலைநாட்ட விரும்பும் இறைவன் நேரிய உள்ளத்தோரை நிச்சயம் பாதுகாத்து வழிநடத்துவார் என்கிற நம்பிக்கை இங்கே வெளிப் படுத்தப்படுகிறது.

**ஐந்தாம் பகுதியில்,** ஆசிரியர் தன் நம்பிக்கை வீண் போகாது என்கிற மகிழ்ச்சியை வெளிப் படுத்துகிறார். ஏக்கத்தோடு எதிர்பார்க்கப்படும் நீதியை கடவுள் நிச்சயமாக அருள்வார் என்பதை நன்றியுடன் உணர்ந்துகொள்கிறார். தீவினையைச் செய்கிறவர்கள் தாங்கள் வெட்டிய குழியிலேயே விழுந்து விடுகின்றனர் என்றும், அவர்களின் கொடுமை அவர்களையே வந்தடையும் என்றும் கூறுகிறார். இறை நீதியைப் பற்றிய இந்தக் கருத்து இஸ்ரயேலைச் சுற்றியுள்ள பிற கலாச்சாரங்களிலும், பழைய ஏற்பாட்டிலும் அடிக்கடி வருவதைப் பார்க்கலாம் (காண்க. திபா 9:16; 35:8; 57:6; நீமொ 26:27; 28:10). நல்லவர்களை தீயோர் எவ்வளவுதான் துன்புறுத்தினாலும், இறுதியில் அழியப்போவது தீயோர்தான் என்கிற ஆசிரியரின் நம்பிக்கையைப் பார்க்கும்போது, கடவுளின் நீதி என்றும் பிறழாது என்றும், தக்க சமயத்தில் அது விழித்தெழுந்து, தன் பலத்தை நிரூபிக்கும் என்றும் ஆசிரியர் உணர்ந்துகொண்டு, கடவுளுக்கு நெஞ்சார நன்றி கூறும் வித்த்தில் இப்பாடலை எழுதியுள்ளார் என்றறிகிறோம்.

வேதனையை வெளிப்படுத்தும் விதத்தில் தொடங்கிய இந்தத் திருப்பாடலின் இறுதியில் ஆசிரியரின் அசைக்க முடியாத நம்பிக்கையைக் காண்கிறோம். நல்லவர்கள் ஒருபோதும் தோல்வியடைய மாட்டார்கள்; கடவுள் அவர்கள் அருகில் இருந்துகொண்டு, அவர்களை எப்பொழுதும் காத்து வழிநடத்துவார் என்கிற பாடம் இந்தப் புலம்பல் திருப்பாடலின் மூலம் நமக்கு வழங்கப்படுகிறது.



# மரியா

## ஜென்ம பாவமின்றி உற்பவித்தவர்

தூய வாழ்விற்கான அழைப்பை எல்லோருக்கும் இறைவன் வழங்குகிறார் (எபே 1:லேவி 19:2). ஆனால், மரியாவின் அழைப்பு சற்று வித்தியாசமானது. எனவேதான் மறைபொருள் எனப்படுகிறது. அருள்மிகப் பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார் (லூக்கா 1:28). எவரொருவர் பாவமின்றி வாழ்கின்றாரோ அவர்தான், இறையருளைத் தொடர்ந்து நிறைவாகப் பெறமுடியும்.

1439-ல் மக்களின் விருப்பத்திற்கிணங்க, மரியாவின் பாவமின்மையைக் கோட்பாடாக அறிவிக்கக் கோரி பேசல் திருச்சங்கத்தின் வழியாக, திருச்சபை முயற்சி எடுத்து, அதில் தோல்வி கண்டது. 1854 ஆம் ஆண்டு, டிசம்பர் 8-ல், திருத்தந்தை9ஆம் பத்திநாதர், இனெஃபிலிஸ்தேயுஸ் என்னும் தனது சுற்றுமடலில், மரியா தனது கருத்தரிப்பின் முதலே பாவ நாட்டங்களிலிருந்து பாதுகாக்கப்பட்டார் என அறிவித்தார்.

கிழக்குத் திருச்சபையானது, கி.பி.8 ஆம் நூற்றாண்டிலிருந்து, டிசம்பர் 8-இல், தூய அன்னாளின் கருத்தரிப்பு நிகழ்வாக இவ்விழாவைக் கொண்டாடியது. ஆனால், மேற்கு திருச்சபை, சிறு மாற்றத்துடன், கி.பி 9 ஆம் நூற்றாண்டில் தூய அன்னாளின் கருப்பையில் மரியாவின் கருத்தரிப்பு என கொண்டாடியது. சில கால இடைவெளிக்குப் பிறகு, கி.பி 13 ஆம் நூற்றாண்டில் மீண்டும் இவ்விழா ஆரம்பிக்கப்பட்டது. திருத்தந்தை 4ஆம் சிக்ஸ்துஸ் இவ்விழாவைச் சிறப்பிப்பதற்கான திருப்பலியையும், கட்டளை செபத்தையும், 1477இல் அங்கீகரித்தார்.

1708இல், திருத்தந்தை 11 ஆம் க்ளெமெண்ட், விழாவிற்குரிய செபங்களையும், தொடக்கவுரையையும் இணைத்தார். இவ்வாறு, இம்மறைபொருள் மக்களின் விசுவாசத்தை முன்னிறுத்திக் கோட்பாடாக உருவெடுத்தது. தூய அல்போன்ஸ் மரிய லிகோரி (1697-1787), பக்தி நிறைந்த திருவழிபாட்டு நிகழ்வும், விசுவாசிகளின் சம்மதமும் கிறிஸ்தவ மறையுண்மையை உருவாக்கப் போதுமானவை எனப் பிரகடனப்படுத்தினார்.

**- தாயே எங்கள் தஞ்சம்**



# சிற்பி

கருங்கல்லைப் பார்த்தார் உலகப் புகழ் பெற்ற சிற்பி ஒருவர். அழகான தெய்வச்சிலையை வடிவெடுத்தார். பார்த்தவர் எல்லோரும் அசந்து போயினர். இவ்வளவு அழகான சிலையா? அதுவும் இந்தக் கருங்கல்லிலிருந்தா? அழகான சிலையையும் சிற்பியையும் வீடியோ எடுத்த நிரூபர் கேட்டார்.

உங்களால் எப்படி இவ்வளவு அழகான சிலையை உருவாக்க முடிந்தது? உங்கள் வெற்றியின் இரகசியம் என்ன?

கையில் உளியுடன் சிற்பி சொன்னார் இந்த அழகான தெய்வச் சிலையை உருவாக்கியது நானில்லை. அது அந்தக் கருங்கல்லுக்குள் ஏற்கெனவே இருந்தது. அதன் வேண்டாத பகுதிகளை மட்டும்தான் நீக்கினேன். சிலை தானாகவே உருவாகிவிட்டது. இதுதான் வெற்றியின் இரகசியம். அவர் மேலும் சொன்னார்.நீயும் வெற்றி பெற வேண்டுமா?

உன்னில் வேண்டாத பகுதிகளை நீக்கிவிடு நீ ஓர் அழகான சிற்பமாவாய் (விடுதலைப் பயண நூல் 4:1-17 மோசே தன்னால் ஒன்றும் இயலாது என்று ஆண்டவரிடம் போராடுகிறார். ஆனால் ஆண்டவர் மோசேயிடம் இருந்த பயத்தைப் போக்கி, அவரை இஸ்ரயேல் மக்களை அடிமைத்தளத்திலிருந்து மீட்கும் ஒரு கருவியாக மாற்றுகின்றார்.

மத்தேயு 25:14-30-ல் இயேசு நம் ஒவ்வொருவரிடமும் ஒளிந்துள்ளதிறமைகளை (தாலந்துகள்) வெளிப்படுத்துகின்றார்.

திருத்தூதர் பணிகள் அதிகாரம் 9-ல் கருங்கல்லாக இருந்த சவுலின் மனதை மாற்றி நற்செய்தியை அறிவிக்கும் கருவியாக மாற்கின்றார்.

நாமும் இந்த தவக்காலங்களில் நம்மிடம் உள்ள வேண்டாத குணங்களான, கோபம், பொறாமை, புறங்கூறல், இரக்கமின்மை, சபித்தல், பொய் பேசுதல் போன்றவற்றை நீக்கி, ஜெபத்திலும், தவமுயற்சிலும் ஈடுபட்டு நற்செய்தியை பரப்பும் கருவியாக நம்மை மாற்ற இத்தவக்காலத்தில் சிற்பியாம் இயேசு கிறிஸ்துவின் வசம் நம்மை ஒப்படைப்போம் அவர் நம்மை அழகான சிற்பமாக பயனுள்ள கருவியாக மாற்றிட இத்தவக்காலத்தை பயனுள்ள முறையில் மாற்றிட, இயேசு கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளை பின் தொடர்ந்திட அருள் வரம் கேட்டு மன்றாடுவோம்.

**S.நிர்மலா ராணி,** மார்க்கம்பட்டி

# திருக்கல்யாணத்தாயே.....



கடல் இல்லாமல் அலை இல்லை
காற்று இல்லாமல் தென்றல் இல்லை
மரம் இல்லாமல் மழை இல்லை
அனை இல்லாமல் நீர்த்தேகம் இல்லை
ஆசை இல்லாமல் மனிதன் இல்லை
கதிரவன் இல்லாமல் காலை இல்லை
செடிகள் இல்லாமல் மலர்கள் இல்லை
அன்னை திருக்கல்யாணத்தாயின் துணை இல்லாமல்
எங்களுக்கு வாழ்வே இல்லை.

**P. ஜோஸ்பின்,** பொத்தக்காலன்விளை.

# கைக்கதைகள்

கைகளை பயன்படுத்திதான் நாம் அனைத்து வேலைகளையும் செய்கிறோம். கைகள் இல்லையேல் நம்மால் எதுவும் செய்யமுடியாது. கைகளைப் போலவே கை என்ற சொல் சேர்ந்த வார்த்தையை எங்கெல்லாம் பயன்படுத்து - கிறோம்என்றுகாண்போம். பிறந்த குழந்தையை கைக்குழந்தை என்கிறோம். வயதானவரை கைத்தாங்கலாக அழைத்துச்செல்லுகிறோம். ஒருவரிடம் உதவி கேட்க கையேந்தி நிற்கிறோம். உதவி செய்யவில்லையெனில் அவர் கைவிரித்து விட்டார் என்கிறோம். உதவி பெற்று உயர்ந்தால் அவரை கைராசிக்காரர் என்கிறோம். அவருக்கு என்ன கைமாறு செய்யப் போகிறோம் என்கிறோம். சிறிய தொகை கடன்வாங்குவதை கைமாற்று என்றழைக்கிறோம். கைதேர்ந்த செயலைச் செய்பவனை கைதட்டி பாராட்டுகிறோம். இவருக்கு இடையில் கைகலப்பு என்கிறோம். மனைவி சொல் கேட்டு நடப்பவனை கையாலாகாதவன் என்றும், அந்த மனைவியை கைகாரி என்றும் கூறுகிறோம். அவன் மாட்டிக் கொண்டால் கைது செய்து கைதி என்கிறோம்.படித்தவன் கையெழுத்து இடுகிறான். படிக்காதவன் கைநாட்டு என்று அழைக்கப்படுகிறான். கைரேகை பார்ப்பவனுக்கு கைமேல் பலன் கிடைக்கிறது. கணவனை இழந்த பெண் கைம்பெண் என்று அழைக்கப்படுகிறாள். வாய் பேச முடியாதவனுக்கு கை அசைவே வாய்மொழி. கால் இல்லாதவனுக்கு கைகள்தான் கால்கள். வயதான முதியவருக்கு கைத்தடியே கைத்துணை. வெளியே கிளம்பும் போது கைக்கடிகாரத்தையும், கைப்பேசியையும், கைப்பையையும் யாரும் மறப்பதில்லை. திருப்பலியில்குரு இறைமக்களுக்கு ஆசிகூறுவது கைகளால்தான். மேலும் நம்மை நம் ஆண்டவராகிய கடவுள் என் உள்ளங்கையில் உன்னை பொரித்து வைத்துள்ளேன் என்கிறார். ஆக கைஎன்ற சொல்லை எத்தனை விதங்களில் உபயோகப்படுத்துகிறோம் பாருங்கள். மேலும் வேறு என்ன வார்த்தைகள் உள்ளன என்று சிந்தியுங்கள்!



**திவ்யா கிங்ஸ்லி,** பொற்பை

## விவிலியம் - சிறு துளி



உலகில் நூல்கள் வரிசையில் முதன்முதலாக அச்சடிக்கப்பட்டதும், அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டதும், மிக அதிகமாகவிற்பனையாவதும் பைபிள் தான். முதலில் 1,455ல் லத்தீன் மொழியில் அச்சிடப்பட்டது. ஒரு பிரதியில் 1,282 பக்கங்கள். பக்கத்துக்கு 36 வரிகள். அப்போது காகிதம் கண்டுபிடிக்கப்படாததால் கன்றுக் குட்டிகளைக் கொன்று அந்தத்தோலில் அச்சிட்டனர். 200 பிரதிகள் அச்சிட்டதில் - 7 பிரதிகள் மட்டுமே தற்போது ஜெர்மனி அருங்காட்சியகத்தில் உள்ளது.லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்தில் உள்ள மிகப் பெரிய பைபிள் பழமையானது. ரப்பர் எழுத்துக்களைப் பயன்படுத்தி கைகளால் அச்சடிக்கப்பட்டது. இதன் நீளம் 4.1 அடி. பருமன் 2.9 அடி. எடை அரை டன். மொத்தப்பக்கங்கள் 8,004. உலகில் அச்சு இயந்திரத்தில் அச்சான முதல் நூல் பைபிள்.

V.**டெல்பின்,** பொன்னேரி.

# தேவாலயம் அறிவோம்



வாடிகன் நகரில் உள்ள செயின்ட் பீட்டர் தேவாலயம் மிகப் பெரியது. உயரம் 463 அடி இதன் உச்சியில் தங்கச் சிலுவை உண்டு. ஒரே வேளையில் 43 ஆயிரம் பேர் மண்டியிட்டு வழிபாடு நடத்த முடியும். இந்தத் தேவாலயம் கட்டிமுடிக்க நீண்ட காலம் (1453 முதல் 1609 வரை ) ஆனது. இங்கு போப் ஆண்டவர்களின் திரு உடல்கள் அடக்கம் செய்யப்பட்டு, தினமும் வழிபாடு நடத்தப்படுகிறது.

ஜெர்மனி உல்ம் நகரில் 1377ல் கட்டப்பட்ட கிறிஸ்துமஸ் ஆலயமே மிக உயரமானது. உயரம் 529 அடி. ஒரே நேரத்தில் 30 ஆயிரம் பேர் இங்கு வழிபடலாம்.

பிரேசில் நாட்டின் ரியோடி ஜெனிரோவில் 2 ஆயிரத்து 460 அடி உயர மலை உச்சில் 125 அடி கொண்ட கிறிஸ்துவின் பிரமாண்ட சிலை உள்ளது. இதை ஆண்டுக்கு ஒரு முறை சுத்தம் செய்கிறார்கள்.

**A. அன்ட்ரீன் வின்டா,** பொன்னேரி.

# உலகின் ஒளி எம் அன்னை

உலகிற்கெல்லாம் ஒளி விளக்காய்த் துலங்கும்
பொற்பை நகர் திருக்கல்யாண அன்னையே!
பக்தர் பலகோடி நாளும் நின் திருவடி பணிந்து
நலம் பல பெற்று நற்பேறு கண்டனர்!

கடலில் செல்வோரின் கலங்கரை விளக்கான அன்னையே!
கலங்குவோரின் கதியும் எம் திருக்கல்யாண அன்னையே!
தீராத பிணி தீர்த்து நலமருளும் அன்னையே!
தீமை அணுகாதபடி திடமருள்பவரும் நீயே!



நின் திருநாளாம் ஜனவரி 23ல்
அதிசய தேரில் வலம் வந்த அன்னையே!
நின் திருக்காட்சி காண அடியேனுக்கும்
அதிசயம் புரிந்த நின் கருணையே கருணை!

குடும்ப பாரத்தை நின் காலடியில் வைத்தோம்
குழந்தைகளை நின் கரத்தில் ஒப்படைத்தோம்
எழுதும் கரத்தை உமக்கு அர்ப்பணித்தோம்
ஏற்றம் பல கண்டு நல்தேர்ச்சி அருள்வாயே!

கானாவூர் கல்யாண கனிரசம் தந்த அன்னையே!
கல்யாண வரம் வேண்டி வந்தோர் அனைவருக்கும்
நல் வாழ்க்கை துணை தந்து கனிவுடன் காத்தாயே
நன்றியுடன் தொழுகின்றோம் வாழ்க!திருக்கல்யாண அன்னையே!

**E. மேரி மோனிஷா,** சென்னை

# உண்மை கிறிஸ்தவன்



கிறிஸ்துவை தன் கைக்குள் வைத்துள்ளதாக எண்ணுபவன் அல்ல உண்மையான கிறிஸ்தவன். கிறிஸ்துவின் கரங்களுக்குள் புகலிடம் கொண்டு வாழ்பவனே உண்மையான கிறிஸ்தவன்.

ஆண்டவர் அதை செய்யச் சொன்னார் இதைச் செய்யச் சொன்னார் என்று ஆரூடம் கூறி திரிபவன் அல்ல மெய்யான கிறிஸ்தவன். உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும் என்ற அன்னை மரியாளின் பணிவைக் கொண்டவனே மெய்யான கிறிஸ்தவன்.

ஆண்டவர் எனக்குள் இருக்கிறார் என்ற மமதைப் பேச்சு கொண்டவனல்ல மெய்யான கிறிஸ்தவன். அவனுள் ஆண்டவர் இருப்பதை தன் செயல்களால் உலகுக்கு காட்டுபவனே மெய்யான கிறிஸ்தவன்.

ஆண்டவரைத் தன் சொந்த லாபத்திற்காக பயன்படுத்துபவன் அல்ல மெய்யான கிறிஸ்தவன். தன்னை முழுவதும் ஆண்டவருக்கே அர்ப்பணித்தவன்தான் மெய்யான கிறிஸ்தவன்.

அன்று திருமுழுக்கு யோவான் இயேசு கிறிஸ்துவின் மிதியடி வாரை அவிழ்க்கக்கூட நான் தகுதியற்றவன் என்று தாழ்ச்சியுடன் மொழிந்தார். ஒரு உண்மையான கிறிஸ்தவனோ, இயேசு கிறிஸ்து அல்ல, யோவானின் மிதியடி வாரைத் தொடக்கூட தான் தகுதியற்றவன் என்ற பணிவான எண்ணத்தை தன் ஆழ்மனதில் கொண்டவன்.

பில்லி சூனியங்களுக்கும் பித்தலாட்டங்களுக்கும் அஞ்சி நடுங்கி பிற மனிதர்களின் பின்னால் பதுங்குபவன் அல்ல மெய்யான கிறிஸ்தவன். மேலிருந்து அருளப்படாவிட்டால் என்மேல் உமக்கு எந்த அதிகாரமும் இல்லை என்ற இயேசு கிறிஸ்துவின் வாக்கையே தன் கருவியாகக் கொண்டு எத்தீங்கையும் நொடியில் வெல்பவனே மெய்யான கிறிஸ்தவன்.

என் விருப்பமெல்லாம் நிறைவேற ஆண்டவரை மன்றாடுவேன் என்று கட்டியம் கட்டி ஜெபிப்பவனல்ல மெய்யான கிறிஸ்தவன். அன்று கெத்சமனே தோட்டத்தில் இயேசு கிறிஸ்து மொழிந்த, என் சித்தமல்ல உம் சித்தமே நிறைவேறட்டும் என்ற வார்த்தையையே தன் ஜெபத்தின் அடிப்படையாகக் கொண்டவனே மெய்யான கிறிஸ்தவன்.

தீர்க்கதரிசனம் கூறும் மனிதர்கள் பின் அலைபவனல்ல மெய்யான கிறிஸ்தவன். ஆண்டவரின் வார்த்தை மட்டும் என் வாழ்வில் அப்படியே நிறைவேறும் என்ற ஆணித்தரமான விசுவாசம் கொண்டவனே மெய்யான கிறிஸ்தவன்.

காற்று வீசும் திசையிலெல்லாம் சாயும் நாணல்போல, உலகின் மாறும் சூழ்நிலைகளுக்கெல்லாம் அசைந்து போகிறவன் அல்ல மெய்யான கிறிஸ்தவன். சூழ்நிலைகள் சாதகமானாலும் பாதகமானாலும் அசையாத கன்மலையாய் தன் கிறிஸ்தவ விசுவாசத்தில் நிலைப்பவனே மெய்யிலும் மெய்யான உண்மை கிறிஸ்தவன்.

**த.பீட்டர் அந்தோணிராஜ்,ஆசிரியர்**

# திருச்சபைச் செய்திகள்

அருட்திரு. முனைவர் R.**ஜோசப் ரவிபாலன்**

**1. தொலைப்பேசி மூலம் அனுதாபம்**

லிபியா நாட்டின் தலைநகரம் திரிபோலியின் அருகிலுள்ள கடற்கரையில் இருபத்தோரு எகிப்தியக் கிறிஸ்தவர்கள் சிரச்சேதம் செய்யப்பட்டு மடிந்தனர். இந்தக் கொடூரக் கொலையில் ஈடுபட்டவர்கள் இஸ்லாமிய அடிப்படை வாதத்தை வலியுறுத்தும் பயங்கரவாதிகள். திருத்தந்தை ஃபிரான்சிஸ் காப்டிக் (Coptic) கிறிஸ்தவர்களின் தலைவராகிய இரண்டாம் தவாட்ரோஸிடம் தொலைப்பேசியில் தொடர்பு கொண்டு, கொலை செய்யப்பட்ட கிறிஸ்தவர்களைக் குறித்து தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்தார். கொலையாளிகள் அனுப்பியுள்ள "சிலுவையின் நாடுகளுக்கு இரத்தத்தால் கையெழுத்திடப்பட்டு அனுப்பப்படும் ஒரு செய்தி" என்கிற தலைப்பிலுள்ள ஒரு குறுந்தகட்டில் அடங்கியுள்ள கொலையாளிகள் சம்பந்தப்பட்ட நிகழ்வுகள் ஒளிபரப்பப்பட்டன. அந்தக் குறுந்தகட்டில் கிறிஸ்தவர்கள் கொலை செய்யப்பட்டதைப் பதிவு செய்திருந்தனர். இருபத்தோரு பேரையும் கொன்றபின் அந்தக் கோரக்கொலையில் ஈடுபட்டக் கொலையாளிகளில் ஒருவன் "நாங்கள் உரோமையை வெல்வோம்" என்று எச்சரித்தது அந்தக் குறுந்தகட்டில் பதிவாகியுள்ளது. கொல்லப்பட்டவர்கள் "இயேசுவே, என்னைக் காப்பாற்றும்" என்று மட்டும் கூறினர்.

வத்திக்கானின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ஃபெடரிக்கோ லொம்பார்டி என்கிற இயேசு சபைக் குரு திருத்தந்தை அனுப்பியுள்ள இரங்கல் செய்தியைப் பற்றிக் குறிப்பிட்டார். இஸ்லாமிய அடிப்படை வாதிகள் நிகழ்த்திய வெறிச் செயல்களின் காரணமாக உயிரிழந்தவர்களுக்காக திருத்தந்தை தம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்ததாகக் கூறினார். பயங்கரவாதத்திற்குப் பலியான அப்பாவிக் கிறிஸ்தவர்களுக்காக தாம் இறைவனிடம் மன்றாடுவதாகக் கூறி ஆறுதல் சொன்னார். தன்னை சந்திக்க வந்த ஸ்காட்டுலாந்து நாட்டுக் கிறிஸ்தவர்களின் பிரதிநிதிகளிடம் பேசியபோதும், தான் தயாரித்திருந்த உரையிலிருந்து சற்று விலகி, இருபத்தோரு கிறிஸ்தவர்களைக் கொன்ற நிகழ்வினைக் குறித்து தமது கண்டனத்தைத் தெரிவித்தார். அப்பாவிக் கிறிஸ்தவர்கள் இஸ்லாமியப் பயங்கரவாதிகளால் கொல்லப்பட்டதற்கு ஒரே காரணம் அவர்கள் கிறிஸ்தவர்களாய் இருந்ததுதான் என்று திருத்தந்தை கூறினார். கொல்லப்பட்ட அந்தக் கிறிஸ்தவர்களின் இரத்தம் இயேசு கிறிஸ்துவுக்கு உண்மையான சாட்சியம் வழங்கியுள்ளது என்று திருத்தந்தை கூறினார்.

**2. புதிதாக இருபது கர்தினால்கள்**

பிப்ரவரி மாதம் 14ஆம் நாள் சனிக்கிழமை உரோமையிலுள்ள புனித பேதுரு பேராலயத்தில் இருபது புதிய கர்தினால்களைத் திருத்தந்தை ஏற்படுத்தினார். அந்த நிகழ்வின்போது, முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் கலந்துகொண்டார். புதிய கர்தினால்களை நியமிக்கும் திருநிகழ்வில் பதினாறாம் பெனடிக்ட் கலந்துகொண்டது இது முதல் முறையல்ல. சென்ற ஆண்டில் பிப்ரவரி மாதம் 22ஆம் நாள் புதிய கர்தினால்களை ஏற்படுத்தும் நிகழ்விலும் அவர் கலந்துகொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இரண்டாம் முறையாக திருத்தந்தை ஃபிரான்சிஸ் புதிய கர்தினால்களை நியமிக்கும் நிகழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறார்.

புதிதாக நியமிக்கப்பட்ட கர்தினால்களுக்கு அறிவுரை கூறியபோது, கர்தினாலாக இருப்பதை பெரிய கௌரவமான பதவியில் இருப்பதாக எண்ணிவிடக்கூடாது என்றும், மாறாக, எந்தச் செயலையும் செய்கிறபோது ஒவ்வொரு

கர்தினாலும் அன்பை மட்டும்தான் முன்னிறுத்த வேண்டும் என்றும் திருத்தந்தை ஃபிரான்சிஸ் கூறினார். திருச்சபையில் அனைத்துப் பணிகளும் அன்பிலிருந்து தொடங்குகின்றன என்றும், அவற்றை அன்பினால் மட்டும் நிறைவேற்ற வேண்டும் என்றும், அவை அனைத்தும் அன்பை நோக்கிய வண்ணமே இருக்க வேண்டும் என்றும் திருத்தந்தை அறிவுரை கூறினார். 'கர்தினால்' என்கிற சொல் கதவை மரச்சட்டத்தோடு இணைக்கும் 'கீல்' அல்லது தராசுக்கோல் (pivot) என்கிற அர்த்தம் கொண்ட 'கார்தோ' என்கிற இலத்தீன் சொல்லிலிருந்து எடுக்கப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டிய அவர், 'கீல்' அழகுக்காக மாட்டப்படுவதல்ல, மாறாக அது கதவுக்குப் பாதுகாப்பாகவும், பலமாகவும் இருக்கிறது என்று சொல்லி, அதுபோலவே கர்தினால்கள் கிறிஸ்தவச் சமூகத்திற்கு உயிரூட்டுபவர்களாக, அதைக் கட்டிக் காப்பவர்களாய் செயல்பட வேண்டும் என்று கூறினார். அகில உலக அன்புச் சமூகமாய் விளங்கும் திருச்சபையை வழிநடத்தும் உரோமைத் திருச்சபையுடன் கர்தினால்கள் பின்னிப் பிணைந்திருக்கின்றனர் என்பதை திருத்தந்தை சுட்டிக்காட்டினார்.

**3. கருணைக் கொலை அங்கீகரிக்கப்படுகிறது**

கனடா நாட்டின் உச்ச நீதி மன்றம் கருணைக் கொலை குற்றமல்ல என்று அறிவித்திருக்கிறது. பிப்ரவரி மாதம் 6ஆம் நாள் உச்ச நீதி மன்றத்தின் ஒன்பது நீதிபதிகள் இணைந்து ஏகமனதாக கருணைக் கொலையை நியாயப்படுத்தினர். இந்தத் தீர்ப்பு 1994ஆம் ஆண்டு வழங்கப்பட்டத் தீர்ப்பிற்கு மாறாக அமைந்துள்ளது. தற்கொலைக்கு உதவி செய்வது குற்றம் என்கிற சட்டத்தை இந்தத் தீர்ப்பு நீக்கிவிட வில்லையென்றாலும், குணமாக்கப்பட முடியாத கொடூர நோயின் காரணமாகவோ அல்லது மிகவும் அதிகமாக ஊனமுற்ற நிலையில் இருப்பதனாலோ தன்னால் உலகில் சராசரி மனிதனைப்போல தொடர்ந்து வாழ முடியாத நிலை உருவாகியுள்ளது என்பதை ஒருவர் மருத்துவ ரீதியாக உணர்ந்து, வாழ்வதைவிட சாவதே சரியானது என்று தன் விருப்பத்தைத் தெரிவித்தால் அவரைக் கருணைக் கொலை செய்வது குற்றமல்ல என்று கனடா நாட்டு உச்ச நீதிமன்றத்தின் நீதிபதிகள் தீர்ப்புக் கூறியுள்ளனர். உடல் ரீதியான நோயினால் துன்பப்படுகிறவர் மட்டுமல்ல, மன உளைச்சல், மன அழுத்தம் போன்ற மன நோய்களால் பாதிக்கப்படுகிறவர்களும் தங்களை கருணைக் கொலைக்கு உட்படுத்துவது தவறல்ல என்று நீதிபதிகள் வழங்கியுள்ளத் தீர்ப்பிற்கு விளக்கம் தரும் நிபுணர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தத் தீர்ப்பு ஓராண்டிற்குத் தள்ளிவைக்கப்பட்டுள்ளது. வருகிற அக்டோபர் மாதத்தில் கனடாவில் தேர்தல்கள் நடக்கவிருப்பதால் இந்தத் தீர்ப்பின் அடிப்படையில் உடனடியாகவே புதிய சட்டத்தை இயற்றி, அதை செயல்படுத்துவதற்குரிய வாய்ப்புக்களில்லை. இந்தத் தீர்ப்பினை ஆதாரமாக வைத்துக்கொண்டு கனடா நாட்டு பாராளுமன்றம் ஓர் ஆண்டிற்குள் புதிய சட்டத்தைக் கொண்டு வரும். அதன் பிறகுதான் கருணைக் கொலைக்குச் சட்ட அங்கீகாரம் வழங்கப்படும் என்று நிபுணர்கள் கருத்து தெரிவித்துள்ளனர். இந்தத் தீர்ப்பினை எதிர்த்து பல கத்தோலிக்க இயக்கங்கள் குரல் கொடுத்துள்ளன. கனடாவின் கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவர் பால் ஆன்ட்ரே துரோஷர் (Paul-Andre Durocher) வெளியிட்டுள்ள அறிக்கையில், தேவையில் இருப்போருக்கு எல்லாக் கத்தோலிக்க கிறிஸ்தவர்களும் உதவிட முன்வர வேண்டும் என்றும், நோயாளிகளுக்கு ஆறுதல் கூறி, தேற்றும் பழக்கம் பல நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ இரக்கத்தின் வெளிப்பாடாக இருந்திருக்கிறது என்றும் கூறினார். தற்கொலை செய்துகொள்ள ஒருவருக்கு உதவுவது நீதியின் செயலுமல்ல, இரக்கமுமல்ல, ஆறுதல் வழங்கும் முயற்சியுமல்ல என்று அவர் உறுதியுடன் கூறினார்.

**4. வத்திக்கான் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள்**

பிப்ரவரி 12, 13 ஆகிய நாள்களில் உரோமையில் நடைபெற்ற கர்தினால்களின் இரண்டு நாள் சிறப்புக் கூட்டத்தில் 164 கர்தினால்கள் கலந்துகொண்டனர். அந்த கருத்துப் பரிமாற்றக் கூட்டத்தில் திருத்தந்தை ஃபிரான்சிஸ் தொடக்கவுரை நிகழ்த்தி, வந்திருந்த கர்தினால்களை வாழ்த்தினார். அந்தக் கூட்டத்தில் வத்திக்கான் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் தற்போது எந்த அளவில் இருக்கின்றன என்பது பற்றி கர்தினால்களுக்குத் தகவல் வழங்கப்பட்டதாக வத்திக்கானின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் ஃபெடரிக்கோ லொம்பார்டி செய்தியாளர்களிடம் தெரிவித்தார். மேலும் அவர் கூறுகையில், திருத்தந்தை

ஃபிரான்சிஸின் ஆணைப்படி, வத்திக்கானில் மேற்கொள்ளப்படும் பொருளாதாரச் சீர்திருத்த நடவடிக்கைகள் குறித்து கர்தினால்கள் திருப்தித் தெரிவித்துப் பாராட்டி மகிழ்ந்தனர் என்றார். கர்தினால்களின் கலந்துரையாடலின்போது, நாற்பது கர்தினால்கள் தங்களது கருத்துக்களைப் பதிவு செய்தனர். அவர்களின் கருத்துப் பரிமாற்றம் அமைதியாகவும், ஆக்கப்பூர்வமாகவும் இருந்ததாக லொம்பார்டி கூறினார். கர்தினால்களின் விவாதத்தின்போது, 'அதிகாரம் பரவலாக்கப்படுதல்' (Decentralization/principle of subsidiarity) என்கிற சொற்பதம்தான் அடிக்கடி பயன்படுத்தப்பட்டதாக அவர் கூறினார். தலத் திருச்சபையில் செய்ய முடியாதவற்றை திருச்சபையின் தலைமையிடம் செய்யவேண்டும், மற்றவற்றை தலத் திருச்சபை பார்த்துக் கொள்ளும் என்கிற ரீதியில் கருத்துப் பரிமாற்றம் செய்யப்பட்டபோது, கோபமோ, பழி வாங்கும் எண்ணமோ வெளிப்படவில்லை என்று தலைமைச் செய்தித் தொடர்பாளர் எடுத்துச் சொன்னார். வத்திக்கான் வங்கி என்றழைக்கப்படும் 'சமய வேலைகளுக்கான நிறுவனம்' (The Institute for Works of Religion) என்கிற அமைப்பில் சீர்திருத்த நிலை எப்படியிருக்கிறது என்பது குறித்தும் கர்தினால்களுக்கு எடுத்துக் கூறப்பட்டது. கர்தினால்கள் தங்களின் சந்தேகங்களைத் தீர்த்துக்கொள்ள கேள்விகள் எழுப்ப நேரம் ஒதுக்கப்பட்டதாகவும், பெரும்பான்மையான கர்தினால்கள் சீர்திருத்த செயல்பாடுகள் பற்றித் திருப்திகொண்டதாகவும் லொம்பார்டி தெரிவித்தார்.

**5. வத்திக்கானில் புதிதாக உருவாக்கப்படவிருக்கும் பேராயங்கள்**

புதிதாக இரண்டு பேராயங்கள் (Congregations) அமைக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக வத்திக்கானின் தலைமைச் செய்தித் தொடர்பாளர் லொம்பார்டி கூறினார். ஆனால் இந்தச் செய்தி முழுவதுமாக உறுதி செய்யப்பட்டச் செய்தியல்ல என்றும் அவர் செய்தியாளர்களிடம் கூறினார். இது குறித்து கர்தினால்கள் தங்களுக்குள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொண்டனர். C9 என்று அழைக்கப்படும் ஒன்பது கர்தினால்களின் அமைப்பு தங்களது எட்டாவது கலந்துரையாடல் அமர்வில் கலந்து கொண்டனர். பிப்ரவரி 9,10,11 ஆகிய நாள்களில் அவர்களின் எட்டாவது அமர்வு இருந்தது. பிப்ரவரி 12, 13 ஆகிய தேதிகளில் கர்தினால்களுக்கென்று நடைபெற்ற இரண்டு நாள் சிறப்புக் கூட்டத்தில் அவர்கள் தங்களது அமைப்பு வத்திக்கானின் தலைமையிடம் (Vatican Curia) குறித்து என்னென்ன கருத்துக்களை விவாதித்துப் பகிர்ந்துகொண்டனர் என்பது பற்றி மற்ற கர்தினால்களிடம் எடுத்துக் கூறினர். கர்தினால்களின் பகிர்தல் கூட்டத்தில் புதிதாக இரண்டு பேராயங்கள் அமைப்பது குறிது விவாதித்துள்ளனர். பிறரன்புச் சேவை, நீதி மற்றும் அமைதிக்காக ஒரு பேராயமும், பொதுநிலையினர், குடும்பம் மற்றும் வாழ்வு ஆகியவற்றுக்காக இன்னொரு பேராயமும் அமைக்கப்படலாம் என்று கூறப்பட்டது. பிறரன்புச் சேவை, நீதி, அமைதிக்கான பேராயத்தில் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டிற்கான ஒரு புதிய அலுவலகம் உருவாக்கப்படலாம் என்று செய்திகள் கசிகின்றன. அதே பேராயத்தில் புலம் பெயர்ந்தவர்கள் மற்றும் அகதிகளுக்கானப் பணிகள், சுகாதாரம் பேணுதல் போன்றவையும் இணைக்கப்படலாம். புதிதாக பேராயங்கள் அமைப்பது குறித்து ஆலோசிக்கப்பட்டு வருகிறதேயொழிய அது சம்பந்தமான இறுதி முடிவு எதுவும் இன்னும் எடுக்கப் படவில்லை என்று லொம்பார்டி கூறினார்,

# உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்

**தொடர்பு கொள்ளுங்கள் - 04639-261230 , 261330, 261430**

**07-02-2015 முதல் சனி அன்னையிடம் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்கள்**

| | | |
|---|---|---|
| திருமணவரம்கிடைக்க | - | 1307 பேர் |
| குழந்தைபாக்கியம் | - | 1211 பேர் |
| சுகப்பிரசவம் | - | 978 பேர் |
| நற்சுகம்பெற | - | 1560 பேர் |
| ஆன்மீகநலன்களுக்காக | - | 740 பேர் |
| தேவஅழைத்தல் | - | 543 பேர் |
| வேலைகிடைக்க | - | 1928 பேர் |
| தொழில்முன்னேற்றம் | - | 1593 பேர் |
| குடும்பசமாதானம் | - | 798 பேர் |
| குடும்பநலன் | - | 625 பேர் |
| உறவினர்நன்மைக்காக | - | 578 பேர் |
| தேர்வில்வெற்றிபெற | - | 1120 பேர் |
| அலகைதொல்லைதீர | - | 898 பேர் |
| மனஅமைதிக்காக | - | 1347 பேர் |
| அறுவைசிகிச்சைவெற்றிபெற | - | 520 பேர் |
| மனமாற்றமடைய | - | 477 பேர் |
| குடிப்பழக்கத்திலிருந்துவிடுபட | - | 1783 பேர் |
| நல்லஇல்லம்அமைய | - | 576 பேர் |
| சோதனைகளைவெல்ல | - | 639 பேர் |
| கடன்தொல்லைதீர | - | 1942 பேர் |
| வழக்கில்வெற்றிபெற | - | 545 பேர் |



அருள்தரும் இமயமே! திருக்கல்யாணத் தாயே! உம்பிள்ளைகளுக்காக **வேண்டிக்கொள்ளும்.** - பங்குத்தந்தை

உங்கள் ஜெப உதவிக்கு எங்கள் இணையதள முகவரி :kalyanamatha@gmail.com

## அறிவிப்பு

**ஏப்ரல் மாதம் முதல் சனி (04.04.2015) புனித வாரம் பெரிய சனியன்று வருகின்ற காரணத்தினால், ஏப்ரல் மாதம் இரண்டாவது சனிக்கிழமை (11.04.2015) அன்று முதல் சனி வழிபாடுகள் நடைபெறும் என்பதை அனைத்து திருக்கல்யாண மாதா பக்தர்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

திருத்தல அதிபர் தந்தை
திருக்கல்யாணமாதா திருத்தலம்
பொத்தக்காலன்விளை

# புனித லூயிஸ் மரிலாக் (1591 – 1660)



இவள் தனது 18-வது வயதில் கப்புச்சின் சபைக் கன்னியராக விரும்பினாள். இவளுடைய ஆன்மகுரு இதை விரும்பவில்லை. பின்னர் இவள் மணமுடித்தாள். கணவரின் சம்மதத்துடன் பாரீஸ் நகர ஏழை மக்களுக்கு உதவி செய்வதில் நேரத்தையெல்லாம் செலவழித்தாள். கணவன் இறந்த பின்னர் துறவியானாள். ஏழை நோயாளிகளை கவனிக்கும்படி ஒரு கன்னியர் சபையை நிறுவினாள். ஏழை நோயாளிக்கு உதவி செய்வதே சபையின் முக்கிய நோக்கம். சேரிகளிலும் மருத்துவமனைகளிலும் கன்னியர்கள் உழைத்தனர். முதல் ஆண்டிலேயே 760 பாவிகளை மனந்திருப்பினர். ஏழைக் குழந்தைகளுக்கு கல்வி கற்பித்தனர். முதியோர் இல்லம் அமைத்தனர். கைவிடப்பட்டவர்களுக்கு இல்லங்களை ஏற்படுத்தினார்கள். ஒவ்வொரு நாளும் 300 ஏழைகளுக்கு உணவு கொடுத்தனர். ஏறக்குயை 900 பெண்களுக்கு உறைவிடம் அளித்தனர். 1400 பேர்கள் இவர்களை நம்பி வாழ்ந்தனர். சிலர் போலந்து நாட்டுக்குச்சென்று, போரில் காயமடைந்த வீரர்களுக்கு சேவை செய்தனர்.

சிந்தனை :

ஏழைகளுக்கு விடாமுயற்சியுடன் சேவை செய்து வா. இயேசுவை நீங்கள் மதித்து நேசிப்பதைப் போல் ஏழைகளையும் நீங்கள் மதித்துநேசியுங்கள். (புனித லூயிஸ் மரிலாக்).

செபம் :

ஆண்டவரே, ஏழைகளிடமாய் நாங்கள் உம்மைக் காணும் வரம் தாரும்.

நன்றி, தூயவர்களின் வரலாறு

## ஆசியா கண்டத்தின் சிறப்புகள்



1. மிகப் பெரிய கண்டம் ஆசியா
2. கடல் மட்டத்திலிருந்து மிக தாழ்ந்த பகுதி சாவுக்கடல்
3. மிகப்பெரிய ஏரி காஸ்பியன் கடல்
4. விவசாயம் துவங்கியது மேற்காசியா
5. வெடிமருந்து கண்டுபிடித்த நாடு சீனா
6. பூஜ்ஜியத்தைக் கண்டுபிடித்த நாடு இந்தியா
7. அச்சுக் கலையை கண்டுபிடித்த நாடு சீனா
8. உலகின் மிகப்பெரும் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடு சௌதி அரேபியா
9. எழுத்துருவாக்கம் தோன்றியது சுமேரியா (ஈராக்)
10. மிக உயரமான சிகரம் எவரெஸ்ட்

**S. டிவாஸ்,** கோவை

## தவக்காலம் மனமாற்றத்தின் காலமாகும்



எவரது பாவம் மன்னிக்க பட்டதோ அவர் பேறு பெற்றவர். தி.பா.32:1

1.மனிதர்கள் பாவவழியை விட்டு விலகி இறை அன்பை தேடி மன மாற்றம் அடைவதே தவக்காலம். புனித காலமாக போற்றப்படுகிறது. நல்ல சிந்தனைகள், இனிய சொற்கள், நேரிய செயல்பாடுகள் இவைகளை நம் மனதில் வளர்த்து வாழ்ந்து காட்டுவதே இறைவனுக்கு ஏற்புடைய தவக்காலம். தவக் காலம் தியாகத்தின் காலமாகும்.

2.**அன்பே பிரதானம் :**-அன்பு என்னும் நல் மரத்திலிருந்தே நற்கனிகள் உருவாகின்றன. இரக்கம், தாழ்ச்சி, பொறுமை, பகிர்வு, பரிவு, கருணை, பிறர் சினேகம், மன்னிக்கும் தன்மையை வளர்த்து நற்பண்பில் வாழ்ந்து காட்டுவதே இறைவனுக்கு ஏற்புடைய காலம். அன்பிற்கு எடுத்துக்காட்டான இனிய கனிகளாகும்.

3.**தேவையற்ற தீய செயல்கள் :**-மனிதர்கள் நாள்தோறும் மனப்போராட்டத்தில் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறான். தேவையற்ற கோபங்கள், பொறாமை, அகம்பாவம், இறுமாப்பு, வஞ்சகம், அகந்தை, பேராசை, அவமதிப்பு, மதிப்பற்றதன்மை, மன்னிக்க மறுக்கும் தன்மை, தற்பெருமை இவையாவுமே இறைவனுக்கு உகந்தவை அல்ல தீய செயல்பாடுகளை விட்டு விலகி இறைவனின் பாடுகளை தியானித்து அமைதியான ஆறுதலை தேடிடுவோம்.

4.**நாவடக்கம் :**-மனித உறுப்புகளிலே நாக்கு பிரதானமானது தெரியபடுத்தமுடியாத வார்த்தைகளைப் பூட்டி வைத்தாலும் வெளியில் கொண்டுவந்து பேச வைத்திடும். கட்டு படுத்தமுடியாத பயங்கரமான உறுப்பு ஆகும். மானிடரையும், ஆண்டவரையும், போற்றுவது, தூற்றுவது,அவதூறு பேசி பொல்லாங்கு கூறுவது இழிவான வேதனை தரும் வார்த்தைகளைப் பேசி மனவேதனைபட செய்வது ஏளனமும் இவ்வாயிலிருந்தே வருகிறது. அடைத்து வைத்து முத்திரை பதித்த வார்த்தைகளைக் கூட வெளியில் பேசும் சக்தி நாவிற்கு உண்டு. இன்னாளில் நாவடக்கம்தேவை.

**-செல்வம்மாள்,** பொற்பை

## ஜெபித்து வாழ்த்துகிறோம்

**12-ம் வகுப்பு மற்றும் 10-ம் வகுப்பு அரசு தேர்வு எழுத இருக்கின்ற அனைத்து மாணவ-மாணவியர்களும் இறைவன் அருளால் திருக்கல்யாண அன்னையின் பரிந்துரையால் சிறந்த முறையில் தேர்வுகள் எழுதி நல்ல மதிப்பெண்கள் பெற்று அனைவரும் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.**

அருட்திரு தாளாளர் தந்தை
தலைமை ஆசிரியை மற்றும் ஆசிரியர்கள்
அலுவலக பணியாளர்கள்
புனித மரியன்னை மேல்நிலைப்பள்ளி
பொத்தக்காலன்விளை.



அருள்தரும் இமயம்

# திருக்கல்யாணத்தாயின் அற்புதங்கள்... சாட்சிகள்...

1. மகனுக்கு கப்பல் வேலை கிடைத்தமைக்கு நன்றி – **ஜெபசேசையா** தூத்துக்குடி
2. புது போட் கிடைத்தமைக்கு நன்றி –**கிளாஸ்டன்** தூத்துக்குடி
3. குடும்பத் தேவைகள் நிறைவேறியமைக்கு நன்றி – **ஆபிரகாம்லிங்கம்** கண்டன்விளை
4. நற்சுகம் கிடைத்ததற்கு நன்றி –**லாரன்ஸ், பெல்லா** மணப்பாடு
5. இறைவன் தந்த இல்லத்திற்கு நன்றி – **அந்தோணி ஜவஹர்பிட்டா** பொத்தக்காலன்விளை
6. மார்பில் உள்ள கட்டி கரைந்ததற்கு நன்றி – **ஸிபானி** ஏர்வாடி
7. வீடு நல்ல முறையில் கட்டி முடிந்ததற்கு நன்றி – **அந்தோணி ஆரோக்கியராஜ்** ஆறுமுகநேரி
8. வெளிநாடு செல்ல விசா கிடைத்தமைக்கு நன்றி –**டேவிட்சன்** கண்டன்விளை
9. திருமணம் நல்ல முறையில் நடந்ததற்கு நன்றி – **பவுல்,வனஜா** திண்டுக்கல்
10. நற்சுகம் கிடைத்தமைக்கு நன்றி – **ஜோசப் செல்வராஜ்** பொத்தக்காலன்விளை
11. கப்பலில் வேலை கிடைத்தமைக்கு நன்றி – **பினு** சித்தன் தோப்பு
12. மகனுக்கு வேலை, வரன் அமைந்ததற்கு நன்றி – **ரெசன்** அழகப்பபுரம்
13. நோயிலிருந்து விடுதலை கிடைத்தமைக்கு நன்றி – **வின்ஸி, அருண்,** ஆலன்கேசவன் புத்தன் துறை
14. திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி – **ராஜா, நசீமா** தேவசகாயம் மவுண்ட்
15. திருமணவரம் கிடைத்தமைக்கு நன்றி – **சேசு அந்தோணி** சின்னமுட்டம்
16. நல்ல வரன் அமைந்ததற்கு நன்றி – **ஸ்டாலின்** மணப்பாடு
17. தக்க தருணத்தில் நிலம் விற்கப்பட்டு திருமணத்திற்கு தடையின்றி பணம் கிடைத்தமைக்கு நன்றி – **மரியராஜ்** தாமரைக்குளம்
18. சாம் அலெக்ஸ் என்ற மகனை தந்த அன்னைக்கு நன்றி – **ராஜேஷ் சகாயராணி** பாலராமபுரம்
19. குழந்தை பாக்கியம் கிடைத்தமைக்கு நன்றி – **செய்சர் கித்தேரியா** இடிந்தகரை
20. குழந்தை வரம் கிடைத்தமைக்கு நன்றி – **ஸ்டான்லி ஜேஸ்மின்** ஆத்தூர்
21. கடன் கொடுத்தப்பணம் திரும்ப கிடைத்தமைக்கு நன்றி – **ரஞ்சித்,** மணலிகரை
22. திருமணம் நல்ல முறையில் நடந்தமைக்கு நன்றி – **ரோஷன், நிஷா,** நாகர்கோவில்
23. திருமணம் நடந்ததற்கு நன்றி – **ஷிபா, ப்ரியா,** பாலராமபுரம்
24. ஆண் குழந்தை கிடைத்தமைக்கு நன்றி – **சுதாகர்,விஜி** மணலிவிளை
25. விசா கிடைத்ததற்கு நன்றி – **ராஜ கான்ஸ்டன்,** மேல் மிடாலம்
26. குடும்பத்தில் சமாதானத்தை தந்ததற்கு நன்றி – **P. ஜோஸ்பின்,** பொற்பை
27. சகோதரன் மனைவிக்கு அறுவை சிகிச்சையில் வெற்றியும் சுகமும்தந்ததற்கு நன்றி – **M. மிக்கேல், உஷா** பொற்பை
28. மாந்திரீக ஏவல் தொல்லையிலிருந்து விடுதலை கிடைத்ததற்கு நன்றி – **டெய்சி,** பாளையங்கோட்டை

## மங்கள நாயகியே அருள்புரிவாய் !



வானருள் அபரிதமாய் பொழியப் பெற்ற
வையகத்து பூஞ்சோலையே !
புவியிருள் அகல உவப்புடன்
பூமகனை பெற்ற கன்னிப்பாவையே !
மாதருள் ஆசிபெற்று செம்மறியாய்
மைந்தனை பலிதந்த நல்லன்னையே !
பாவருள் பொழிந்தென்னை ஆட்கொண்ட
பைந்தமிழின் நாயகியே ! – நீ
வாழ்க ! வாழ்க ! வாழ்கவே !

மங்கள வார்த்தையால் வாழ்த்தப்பெற்ற
மங்காப் புகழ் மலர்மங்கையே !
திங்கள் முகப்பொலிவோடு பொற்பையில்
திருக்கோலம் பூண்ட திருக்கல்யாணியே !
எங்கள் குறைக்களைய அள்ளிக் கொடுக்கும்
தங்கக் கருவூலத் தாரகையே !
செங்கையால் அன்னியெனை இதயகமலத்தில்
நீங்கா இடம் தரும் பொற்(பையின்) பதுமையே !
உன் புகழ் புவனமெல்லாம் பரவ
ஊர்கூடி உழைக்கின்றோம் அருள்புரிவாய் !


**ம.ரூபி அனன்ஸியா,** திருச்சி.

## பாராட்டுகிறோம்

பொத்தக்காலன்விளை பங்கிலுள்ள அன்பியங்களுக்கிடையே பிப்ரவரி மாதம் 22 ஆம் நாள் நடைபெற்ற விவிலிய வினாடி வினாப் போட்டியை சாத்தான்குளம் உதவி பங்குத்தந்தை **அருட்திரு. அருள் பிரபாகரன்** நடத்தினார். போட்டிக்கான பகுதி **இணைச்சட்ட நூல்**. பங்கில் செயல்படும் பன்னிரண்டு அன்பியங்களில் ஆறு அன்பியங்களிலிருந்து பிரதிநிதிகள் போட்டியில் கலந்து கொண்டனர். முதல் பரிசினை **அன்னை தெரசா அன்பியத்தார்** பெற்றனர். அந்த அன்பியத்தின் பிரதிகளாய் வந்தவர்கள் : **லீலா மேரி, கலா, அபிஷேக், சுரேஷ், ஜெரின்** மற்றும் **ஷைனி**. இரண்டாம் இடத்தை திருக்குடும்ப அன்பியத்தார் பெற்றனர். அந்த அன்பியத்தின் சார்பாய் **ஷோபா, சிறிய புஷ்பம், ஜோஸ்பின், நிஷாந்தி, கரோலின் சிறுமலர், ரிச்சர்டு** ஆகியோர் கலந்து கொண்டனர். மூன்றாம் பரிசு **குழந்தை இயேசு அன்பியத்தாருக்கு** வழங்கப்பட்டது. அந்த அன்பியத்திலிருந்து **ராணி, திவ்யா, தேவி, ரீட்டா** மற்றும் **டிப்னா** கலந்துகொண்டனர். போட்டியை நடத்திய அருட்தந்தைக்கும், பரிசுகளைப் பெற்றவர்களுக்கும், கலந்துகொண்டவர்களுக்கும், பரிசுகளை வழங்க நிதியுதவி செய்த பெயர் சொல்ல விரும்பாத குடும்பத்தாருக்கும் நன்றியும், பாராட்டுகளும்.

– பங்குத்தந்தை

# கல்லை அகற்றி விடுங்கள்



தவக்காலம் என்பது நம்மையே நாம் ஆன்ம பரிசோதனை செய்ய வழங்கப்பட்ட காலம். அறிந்தோ,அறியாமலோ நாம் செய்த பாவங்களுக்காக மனம் வருந்தி, இறைவனுக்கு ஏற்புடையவர்களாக வாழ்ந்திட, இறைவன் நமக்கு தந்துள்ள அழைப்பின் காலம்.

அன்று செல்வந்தவனாய் வாழ்ந்த இளைஞனை அழைத்தார் இயேசு, பாவ வாழ்க்கை வாழ்ந்த சமாரியப் பெண்ணை அழைத்தார் இயேசு, இறந்து அடக்கம் செய்யப்பட்டிருந்த லாசரையும் அழைத்தார் இயேசு. அதே இயேசு இன்று நம்மையும் அழைக்கின்றார். தம் திருப்பாடுகளின் வழியாக நமக்கு அழைப்பு விடுக்கின்றார். ஆண்டவர் இயேசுவின் திருப்பாடுகள், நம் ஆன்மாவை சுத்திகரித்து, பலப்படுத்தும் ஆற்றல் மிகு சக்தி கொண்டவை.

திருவிவிலியம் எடுத்துரைக்கும் இறந்து போன லாசர் உயிர் பெற்ற நிகழ்ச்சி (யோவான்-11 :38-44) நாம் அனைவரும் அறிந்ததே. இயேசு கல்லறையை மூடியிருந்த கல்லை அகற்றி விடுங்கள் என்று கூறியதற்கு மார்த்தா ஆண்டவரே, நான்கு நாள் ஆயிற்று, நாற்றம் அடிக்குமே-என்று தயக்கம் காட்டுகின்றார் மறுமொழியாக இயேசு நீ நம்பினால் கடவுளின் மாட்சியைக் காண்பாய் - என்றுரைத்தார் ஆம்,இன்று நாம் நாற்றம் அடிக்கும் கல்லறைகளாக, நடைபிணங்களாக வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். உள்ளத்தின் பாவ நாட்டங்களும், தீய பழக்கங்களும் ஒருவரை நடைபிணமாக்கி விடுகின்றன. லாசரின் கல்லறையை மூடியிருந்தது போல் பெரியதொரு மனபாரம் என்னும் கல் நம் உள்ளத்தை மூடிக் கொண்டு இருக்கிறது.

இதை வாசிக்கும் போதே சிந்தியுங்கள். என்ன பாரம் பெரியதொரு கல் போல் உங்கள் உள்ளத்தை அடைத்துக் கொண்டிருக்கிறது. ஆண்டவரின் சொற்படி அந்த கல்லை அகற்றி விடுங்கள்.நாமும் கடவுளின் மாட்சியைக் காணலாம். நாற்றம் அடிக்குமே என்ற பயமோ, மற்றவர்க்கு தெரிந்துவிடுமே, சமுதாயத்தில் நம்மை மதிக்க மாட்டார்களே என்ற கலக்கமோ வேண்டாம். ஏனெனில் நாம் வாழ்வது பிற மனிதர்களுக்காக அல்ல. நமக்காக மட்டுமே ! நமக்காக சிலுவை சுமந்த இயேசு மாட்சிகள் பல பெற்றார். நாமும் பிறர் நம்மீது சுமத்தும் சிலுவையை தாழ்ச்சியோடு ஏற்றுக்கொள்வோம். நமக்கு மாட்சி உண்டு என்ற நம்பிக்கையோடு.

இத்தனைக் காலமும் பாவ வாழ்க்கை வாழ்ந்திருந்தாலும் நம்மைப் படைத்த இறைவன் நம்மை அழைக்கின்றார். நமக்காக காத்திருக்கின்றார் என்ற விசுவாசத்தோடு நமக்காக சிலுவை சுமந்த இயேசுவின் பாதம் நம் குற்றம், குறைகளை இறக்கி வைப்போம். ஏனெனில் நம் பாவங்களைப் போக்க வந்த சர்வேசுரனுடைய செம்மறி அவர். ஆகையால் நம் ஆன்மாவை தூய்மையாக்கிடும், ஆண்டவரின் திருப்பாடுகளில் அவரோடு இணைந்து நிற்போம். அப்போது அவரது திருப்பாடுகளின் கனிகளால் நமதான்மா புதுப்பிக்கப்படும். நித்தியத்தில் அவரைக் காணும் வரை அவரன்பு நம் ஆன்மாவில் வளர்ந்து கொண்டேயிருக்கும்.

**M. மிக்கேல் உஷா,** பொற்பை



# எனது கிராமம்


– ம. ஜேசுதாசன்
(முன்னாள் தலைவர்,
தமிழ்நாடு மெர்க்கண்டைல் வங்கி)


பொத்தக்காலன்விளையின் முதல் பட்டதாரி

இது வரை பொத்தக்காலன்விளை கிராமத்தில் பல ஆண்டுகளுக்கு முன்னால் பிறந்து வாழ்ந்து சாதனைகள் பல படைத்து அழியா முத்திரை பதித்துவிட்டுச் சென்ற பெரியவர்கள் பற்றி எழுதி வந்தேன். இந்த இதழில், இந்த நூற்றாண்டில் பிறந்து சாதனைகள் புரிந்து இன்றும் நம்மோடு வாழ்ந்து வருகிற பேராசிரியர் ஜேசுதுரை பற்றிய தகவல்களை வாசகர்களிடையே பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

பேராசிரியர் ஜேசுதுரை அவர்கள் ஞானாதிக்கம் உபதேசியாரின் கடைக்குட்டி மகனாக 1932–ம் ஆண்டு மே மாதம் 22–ம் தேதி பிறந்தார். இவருடைய தேதியைப் பற்றி ஒரு சுவராசியமான விஷயத்தை கூறுகிறார்.திரு. ஜேசுதுரை. கிராமத்தில் இன்றும் பாதுகாக்கப்பட்டு வரும் திருமுழுக்கு பதிவேட்டில் பிறந்த தேதியும் திருமுழுக்கு கொடுத்த தேதியும் 22.5.1932 என்றே பதிவு செய்யப்பட்டுள்ளது. அப்படியானால் பிறந்த அன்றே கோயிலில் போய் பெற்றோர் குழந்தைக்கு திருமுழுக்கு கொடுத்தார்களா? அதுதான் இல்லை என அவருடைய தாயாரிடமிருந்து அறிந்து வைத்துள்ளார். பின் என்னதான் நடந்தது? ஊரில் குருவானவர் இல்லாத அந்தக் காலத்தில், குழந்தை பிறந்து நான்கைந்து மாதங்கள் கழித்து பக்கத்து ஊரிலிருந்து குருவானவர் கிராமத்திற்கு வருகின்ற நாளில் எல்லா குழந்தைகளுக்கும் திருமுழுக்கு கொடுக்கும் வழக்கம் இருந்து வந்துள்ளது. பதிவேட்டில் திருமுழுக்கு நாள் குறிக்கப்படும். ஆனால் பிறந்த தேதி குத்துமதிப்பாக நான்கு மாதங்களுக்கு முன்பு என்றோ அல்லது எதுவுமே குறிப்பிடாமலோ பதிவு செய்வார்கள்.திரு.ஜேசுதுரை விஷயத்தில் பிறந்த தேதியாக எதுவுமே குறிப்பிடாமல் விடப்பட்டுள்ளது. இதனால் பிறந்த தேதியாக திருமுழுக்கு கொடுத்த தேதியையே பள்ளி ஏடுகளில் குறிப்பிட்டு அதுவே பிறந்த தேதியாக வழக்கில் வந்துவிட்டது.

சிறுவன் ஜேசுதுரை பள்ளிப்படிப்பை கிராமத்தில் இருந்த ஆரம்ப பள்ளியில் துவங்கியுள்ளார். அந்தக் காலத்தில் ஐந்தாம் வகுப்பு படித்து முடித்துவிட்டு 6–ம் வகுப்பிற்கு சென்று தொடர்ந்து படிக்க விரும்பினால் சாத்தான்குளத்தில் உள்ள R.C.பள்ளியில் படிப்பது வழக்கம். அந்த நடுநிலைப்பள்ளியில் 8–ம் வகுப்பு வரை படித்து முடித்ததும் சாத்தான்குளத்தில் உள்ள TDTA புலமாடன் செட்டியார் உயர்நிலைப்பள்ளியில் 9,10 மற்றும் 11–ம் வகுப்புகள் படித்து S.S.L.C முடித்துள்ளார். பொத்தக்காலன்விளையில் இருந்து சாத்தான்குளத்திற்கு தூரம் 7 கிலோ மீட்டர். மண் சாலை. புத்தகப்பையோடு மதிய

உணவுப்பாத்திரத்தையும் சுமந்து கொண்டு ஒரு ஆண்டு அல்ல, இரண்டு ஆண்டு அல்ல 6 ஆண்டுகள் தினமும் போக வர 14 கிலோ மீட்டர் நடந்து சென்று படித்துள்ளார் என்றால் அவருடைய ஆர்வத்தையும், விடா முயற்சியையும் புரிந்து கொள்ளலாம். ஆனால் அதை ஒரு ஜாலியான அனுபவம் என்றே நினைவு கூறுகிறார். ஏனெனில் சொந்த ஊர் மாணவர்களோடு வழியில் உள்ள மற்ற கிராமங்களிலிருந்தும் மாணவர்கள் சேர்ந்து கொள்ள அவர்களோடு நடந்து ஓடி விளையாடி சமயங்களில் சண்டையும் போட்டு சென்று படித்த காலம் ஒரு இனிமையான மறக்க முடியாத காலம் என நினைக்கிறார்.

1951-ம் ஆண்டு S.S.L.C முடித்த கையோடு இன்டர் படிக்க கல்லூரியை நாடியபோதுதான் ஏற்படுகின்ற தடைகளை உணர்கிறார். கிராமத்தில் பங்குக்குருவானவரோடு நடந்த பிரச்சனையால் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியின் கதவுகள் சாத்தப்பட, தென் இந்திய திருச்சபையால் நடத்தப்படும் செயிண்ட் ஜான் கல்லூரியை நாடுகிறார். அங்கே கல்லூரியிலும் தங்கும் விடுதியிலும் இடம் கிடைக்கிறது. அங்கே இண்டர் முடித்துவிட்டு சென்னையில் உள்ள விவேகானந்தர் கல்லூரியில் கணக்குப் பாடத்தை முதல் பாடமாக எடுத்து 1955-ம் ஆண்டு பட்டப்படிப்பை முடிக்கிறார். பொத்தக்காலன்விளை கிராமத்திலிருந்து வந்த முதல் பட்டதாரி என்ற பெருமையையும் பெருகிறார். இதற்கிடையே பொத்தக்காலன்விளையில் நடந்த பிரச்சனை ஒரளவு தீர்ந்ததால் மீண்டும் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரிக்கு வந்து பட்டதாரி ஆசிரியர் பயிற்சி படிப்பை முடிக்கிறார். அதைத் தொடர்ந்து ஒரு ஆண்டு மணப்பாடு உயர்நிலைப்பள்ளியில் பட்டதாரி ஆசிரியராக பணி செய்கிறார். என்றாலும் மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மேலோங்க, ஆசிரியர் பணியிலிருந்து விலகி திருச்சி புனித வளனார் கல்லூரியில் முதுகலைப் பட்டப்படிப்பை (M.Sc) முடிக்கிறார். இது நடப்பது 1960-ல். ஆக பொத்தக்காலன்விளை கிராமத்தில் இருந்து வந்த முதல் முதுகலை பட்டதாரி என்ற இரண்டாவது பெருமையையும் பெருகிறார். இந்த அரிய சாதனையை இன்றைய நடைமுறையோடு ஒப்பிட்டுப் பார்க்கக்கூடாது. 60 ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு இளைஞர், அதுவும் ஒரு கிராமத்திலிருந்து, யாருடைய தூண்டுதலும், வழி காட்டுதலும் இன்றி எண்ணற்ற தடைக்கற்களைக் கடந்து M.Sc. படித்து வெற்றியோடு வருகிறார் என்றால் அது ஒரு மகத்தான சாதனை என்றே கூறுவேன். M.Sc. படித்து முடித்ததும் பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியின் கணக்கு பாடத்துறையில் விரிவுரையாளராக பணி ஏற்றார். தொடர்ந்து 24 ஆண்டுகள் பணியாற்றி பெயரும், புகழும் சேர்த்தார்.

1957-ம் ஆண்டு திரு. ஜேசுதுரை அவர்கள் பாளையங்கோட்டை சப்கோர்ட்டில் வக்கிலாக தொழில் செய்து வந்த பத்மினி அவர்களை திருமணம் செய்தார். இந்த பத்மினி என்பவர் பிரகாசபுரத்தை பூர்வீகமாகக் கொண்டு பாளையங்கோட்டை புனித சவேரியார் கல்லூரியில் பேராசிரியராகவும் பின்னாளில் வேறு ஒரு கல்லூரியின் முதல்வராகவும் பணியாற்றிய பேராசிரியர் டேவிட் மைக்கேல் அவர்களுடைய மூத்த புதல்வியாவார்.திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்கள் பாளையங்கோட்டை நீதிமன்றங்களில் அரசு வக்கீலாக 12 ஆணடுகள் பணியாற்றினார்கள்.அவருடைய நேர்மையையும் திறமையையும் அறிந்து தமிழ்நாடு அரசு 1983-ம் ஆண்டு சென்னைக்கு அழைத்தது. அரசு அழைப்பை ஏற்று வந்த திருமதி.பத்மினி ஜேசுதுரை அவர்களை தமிழ்நாடு அரசு கூடுதல் பள்ளி பிராசிக்கூட்டராக நியமித்தது. மூன்று ஆண்டுகள் கழித்து 1989-ம்

ஆண்டு அன்றைய முதலமைச்சர் திரு. எம்.ஜி.ஆர். அவர்களின் சிபாரிசின் பேரில் மத்திய அரசு அவரை சென்னை உயர்நீதிமன்றத்தின் முதல் பெண் நீதிபதியாக நியமித்தது. இது திருமதி. பத்மினி ஜேசுதுரை அவர்களின்நேர்மைக்கும், சட்ட அறிவுக்கும் நடுநிலைமைக்கும் கிடைத்த சான்று என்றே எல்லா தரப்பினரும் பாராட்டினார்கள். பொத்தக்காலன்விளை கிராமமோ தனது ஊரின் மருமகளுக்கும், தனக்கும் கிடைத்த பெருமையாக கருதி மகிழ்ந்தது. 1993-ம் ஆண்டு உயர்நீதிமன்ற நீதிபதி பதவியிலிருந்து ஓய்வு பெற்றாலும், அவருடைய திறமையையும்,நேர்மையையும் கருத்தில் கொண்டு மத்திய நிர்வாக தீர்ப்பாயத்தின் தலைவராகவும், வேறு சில விசாரணை கமிஷனின் தலைவராகவும் நியமித்து அரசு அவரை கௌரவித்தது. கடந்த அக்டோபர் மாதம் இவ்வுலக வாழ்வை முடித்துக் கொண்டு இறைவனடி சேர்ந்தார். அவருடைய இறுதி யாத்திரையின்போது பல தரப்பு மக்களும் கலந்து கொண்டு மரியாதை செய்தது நெஞ்சைத் தொடுவதாக இருந்தது.

1982-ம் ஆண்டு திருமதி பத்மினி ஜேசுதுரை அவர்கள் சென்னை வந்ததும் குடும்ப நலனுக்காக திரு. ஜேசுதுரை அவர்களும் சென்னை வந்தார்கள். அங்கே மிகப் பிரபலமான லோயோலா கல்லூரியின் கதவுகள் அவருக்காக திறந்தே இருந்தன. அந்த கல்லூரியின் கணக்குத் துறையில் பேராசிரியராக பதவி ஏற்று அந்தத் துறையின் தலைவராகவும் பின்பு கல்லூரியின் துணைத்தலைவராகவும் பதவி உயர்வு பெற்று 1991-ம் ஆண்டு ஓய்வு பெற்றார். அவருக்கு ஒரு மகனும் மூன்று மகள்களும் உள்ளனர். எல்லோரும் உயர் கல்வி பெற்று சகல வசதிகளோடும் வாழ்ந்து வருகிறார்கள். இன்று சென்னையில் பிள்ளைகள் மற்றும் பேரப்பிள்ளைகளோடு தனது ஓய்வு காலத்தை மகிழ்ச்சியுடன் கழித்துக் கொண்டு இருக்கிறார். ஒரு கிராமத்தில் பிறந்து கிராமப்பள்ளியில் பயின்று பல தடைக்கற்களையும் கடந்து வந்து கல்வித் துறையில் பெரிய பதவியை அடைந்தும் அவரிடம் வீண் டாம்பீகமோ பந்தாவோ என்றும் இருந்ததில்லை. அவை அடக்கம் அவருடைய பெரிய சொத்துஎனலாம். பொத்தக்காலன்விளையின் மிகச்சிறந்த சாதனையாளர்களில் ஒருவர் பேராசிரியர் ஜேசுதுரை என்றால் அது மிகையாகாது.

# பணிவு



கடமையைச் செய்பவன் கருணையில் நனைவான்
மடமையை வெறுப்பவன் மாண்புடன் வாழ்வான்
உண்மையை உணர்பவன் உள்ளதைச் சொல்வான்
நல்லதை நினைப்பவன் நன்மைகள் செய்வான்

ஒழுக்கம் காப்பவன் உயர்ந்து நிற்பான்
நடுக்கம் கொள்பவன் எதையும் இழப்பான்
சொன்னதைச் செய்பவன் சொந்தம் ஆவான்
புன்னகை செய்பவன் இடர் நீங்கி வாழ்வான்

மண்ணகம் காக்க மனிதனாய் வந்த மாதவமே
விண்ணகம் தரும் எங்கள் அன்புறுவே
எண்ணகம் எழுந்து எமைக் காப்பாய் நீயே-உம்
முன்னகம் முழந்தாழிட்டு பணிகிறேன் அருள் ஈவாயே.

- Y.V.R. **ஜோஸ்**, சென்னை.

# உண்ணா நோன்பு



உண்ணா நோன்புக்கென நாள் குறியுங்கள். வழிபாட்டுப் பேரணியை திரட்டுங்கள். ஊர் பெரியோரையும் நாட்டில் குடியிருப்போர் அனைவரையும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் இல்லத்தில் கூடிவரச் செய்யுங்கள் (யோவேல் 1-14). நீங்கள் உங்கள் உடைகளை கிழித்துக் கொள்ள வேண்டாம். இருதயத்தைக் கிழித்துக் கொண்டு உங்கள் ஆண்டவராகிய கடவுளிடம் திரும்பி வாருங்கள்.

1. ஒருவன் தன்னை ஒடுக்கிக் கொள்ளும் நாளையா ஆண்டவராகிய நான் உண்ணாநோன்பின் நாளாக தெரிந்து கொள்வேன்? 2. ஒருவன் நாணலைப் போல தன் தலையைத் தாழ்த்தி சாக்கு உடையையும் சாம்பலையும் அணிந்து கொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? (எசாயா 58-5)

**எப்படிப்பட்ட உண்ணாநோன்பை ஆண்டவர் நோக்காது, கவனியாது இருக்கிறார்:-**

1. நோன்பு இருக்கும் நாளில் உங்கள் ஆதாயத்தை நாடி உங்கள் வேலைகள் எல்லாவற்றையும் செய்கிறார்கள்.

2. உங்கள் குரல் உன்னதத்தில் கேட்கும் படியாய் ஆரவாரம் செய்து நோன்பு இருக்கிறார்கள்.

**ஆண்டவராகிய இயேசு சொன்னார் :-**

நோன்பு நாளில் முகவாட்டமாய் இருக்க வேண்டாம். உங்கள் தலையில் எண்ணெய் தேய்த்து முகத்தை கழுவுங்கள். அப்போது நீங்கள் நோன்பு இருப்பது மனிதர்க்கு தெரியாது. மறைவாய் உள்ளதைக் காணும் உங்கள் தந்தை உங்களுக்கு கைமாறு அளிப்பார்.

வழக்கடைவும் வீண் சண்டையிடவும் கொடும் கையால் தாக்கவுமே நோன்பு இருக்கிறார்கள். இப்படி கொடும் கையினால் நோன்பு இருக்கிறீர்கள். இப்படி கொடும் கையினால் ஒருவரை தாக்கவே நோன்பு இருந்த ஒரு அரசர் பற்றியும், அவரது மனைவி பற்றியும், அவரது நிலைமையும் பற்றி பார்ப்போம்.

**உண்மைக்கு புறம்பான நோன்பு : -**

நாபேத் என்ற ஒரு மனிதனுக்கு சமாரிய அரசான ஆகாப் என்பவனின் அரண்மனைக்கு அருகில் ஒரு திராட்சை தோட்டம் இருந்தது. ஆகாப்புக்கு அந்த நாபோத்தின் திராட்சை தோட்டத்தின் மேல் ஆசை வந்தது. ஆகாபு நாபோத்திடம் உன் திராட்சை தோட்டம் என் அரண்மனைக்கு அருகில் உள்ளது.எனவே நீ அதை எனக்கு காய்கறி தோட்டம் ஆக்கும் படி நல்ல விலைக்கு கொடு.அல்லது அதற்கு பதிலாக அதைவிட நல்ல திராட்சை தோட்டத்தை உனக்கு தரும்படி கொடு என்றான். நாபோத்- இது என் மூதாதையரின் உரிமை சொத்து எனவே உமக்கு தர முடியாது என்றான்.

ஆகாபு ஆத்திரத்துடனும், கோபத்துடனும் தன் அரண்மனைக்கு வந்து உணவருந்த மறுத்து முகத்தை திருப்பி கொண்டான். இதை அறிந்த அவரது மனைவி ஈசபேல் நோன்பு என்ற பெயரில் ஆகாப் ராஜாவின் கொடுங்கையால் குத்த திட்டம் தீட்டினாள். ஆகாப் பெயரில் மடல்களை எழுதி முத்திரையிட்டு நாபேத்

குடியிருக்கும் நகரில் உள்ள பெரியோருக்கும் உயர்குடி மக்களுக்கும் அனுப்பினாள். நீங்கள் ஒரு நோன்பு அறிவித்து நாபோத்தை மக்கள் முன்னிலையில் அமர செய்து நாபோத் கடவுளையும் அரசரையும் பழித்துரைத்தான் என்று அவன் மீது குற்றம் சாட்டி அவனுக்கு எதிராய் இரண்டு இழி மனிதர்களை உருவாக்கி (சாட்சி உருவாக்கி) இறுதியில் கல்லை எறிந்து கொன்று போடுங்கள் என்று எழுதியிருந்தாள். (1 அரசர் 21-9-10) அப்படியே மடலில் எழுதிய படியே நகரில் குடியிருந்த பெரியோரும் உயர் குடி மக்களும் இரண்டு இழி மனிதர்களை சாட்சியாக உருவாக்கி நாபோத்தை பழித்து இறுதியில் கல் எறிந்து கொன்றனர்.

**இறைவாக்கினர் எலியா :-**

நாபோத் இறந்ததும் அவன் திராட்சை தோட்டத்தை உடைமை ஆக்கி கொள்ள புறப்பட்ட ஆகாப் ராஜாவை இறைவாக்கினர் எலியா பார்த்து உரைத்தது.நீ கொலை செய்து கொள்ளை அடித்து இருக்கிறாய். நாய்கள் நாபோத்தின் இரத்தத்தை நக்கிய அதே இடத்தில் உனது இரத்தத்தை நக்கும். நாய்கள் உன் மனைவி ஈசபேலை நாபோத்தின் மதிலருகே திண்ணும்.

**ஆகாப்பின் நோன்பு :-**

ஆகாப் ராஜா தன் ஆடைகளை கிழித்துக் கொண்டு வெற்றுடல் மீது சாக்கு உடை உடுத்தி நோன்பு காத்து சாக்கு துணி மீது படுத்து தன்னை தாழ்த்தி ஆண்டவர் பார்வையில் தீயதை செய்து விட்டோமோ என்று கலங்கினான். மீண்டும் இறைவாக்கினர் எலியா உரைத்தது நான் அவன் வாழ்க்கையின் போது தீமை வர செய்யாமல் அவனது மகன் வாழ்நாளின் போது தீமை வர செய்வேன். அப்படியே தன் மகனுடைய நாட்களில் சீரியா அரசரை எதிர்த்து யூதாவின் அரசர் யோசபாத்தும் இஸ்ரவேல் அரசன் ஆகாப்பும் - இணைந்து மாறுவேடம் போட்டு போர்களத்திற்கு சென்றாலும் ஒருவன் சரியாய் ஆகாப் மீது அம்பை எய்தான். அன்று போர் தீவிரமாய் இருந்தபடியால் அந்த காயத்தினால் இரத்தம் வழிந்து தேரின் அடிதளத்தை நனைத்தது. ஆண்டவரின் வாக்கின்படியே நாய்கள் அவனது இரத்தத்தை நக்கியது.

**உண்மைக்கு புறம்போன நோன்பு கூடாது :-**

கொடும் கையால் நாபோத்-ஐ தாக்கவே நோன்பு இருந்த ஆகாபின் இரத்தத்தை நாய் நக்கியது. அவன் மனைவி ஈசபேலை நாபோத்தின் மதிலருகே தின்றது.

**ஆண்டவர் விரும்பும் உண்மையான உண்ணா நோன்பு : -**

கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும்
நுகத்தின் பிணையல்கள் அறுப்பதும்
ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும்
நான் தேர்ந்து கொள்ளும் நோன்பு !

பசித்தோர்க்கு உங்கள் உணவைப் பகிர்ந்து கொடுப்பதும் தங்க இடமில்லா வறியோரை உங்கள் இல்லத்திற்கு அழைத்து வருவதும் உடையற்றோரைக் காணும்போது அவர்களுக்கு உடுக்க கொடுப்பதும் உங்கள் இனத்தோருக்கு உங்களை மறைத்து கொள்ளாதிருப்பதும் அன்றோ நான் விரும்பும் நோன்பு (எசாயா 58 -6,7).

அதாவது நாம் உண்ணா நோன்பு இருந்து ஆண்டவரிடம் ஜெபம் செய்து பிறருடைய கொடுமையான தளைகளை அவிழ்க்க வேண்டும். பிறருடைய நுகத்தின் பிணையல்களை அறுக்க வேண்டும்.ஒடுக்கப்பட்ட மக்களை விடுதலை செய்து அவர்களுடைய எவ்வகை நுகத்தையும் உடைத்து எறிய வேண்டும்.

அதோடு விட்டுவிடாமல் அவர்கள் பசிக்க (தேவைக்கு) நம் உணவை (நமக்கு சொந்தமானதை) பகிர்ந்து கொடுக்க வேண்டும். தங்க கூட இடம் இல்லாத வறியோரை நம் இல்லத்திற்கு அழைத்து வந்து உடுக்க கூட நல்ல உடை இல்லாதவருக்கு நல்ல உடை கொடுக்க வேண்டும். உங்கள் இனத்தாருக்க (உறவினருக்கு) உங்களை மறைத்து கொள்ளாதிருக்க வேண்டும்.

**எஸ்தர் : –**

மொர்தக்காயையும் யூதமக்கள் அனைவரையும் அழிக்க ஆமான் என்பவர் ஆகாஸ் வேரு அரசர் ஆட்சி செய்யும்போது திட்டம் தீட்டினார். எஸ்தர் தானும் தன் தோழியார் உடன் சேர்ந்து மூன்று நாள் இரவு பகல் உண்ணாமலும், குடியாமலும் நோன்பு இருந்தார். மொர்த்தக் சபையும் யூத மக்களும் நோன்பு இருந்தார்கள். எல்லோரும் ஆண்டவரிடம் தங்களை தாழ்த்தி நோன்பு இருந்து ஜெபம் செய்து யூத மக்களுடைய கொடுமை தளைகளை அவிழ்க்கும் படியாகவும் அவர்களுடைய நுகத்தின் பிணையல்கள் அறுக்கும் படியாகவும், ஒடுக்கப்பட்ட யூதரை விடுவிக்கும் படியாகவும் இருந்தனர். இறுதியில் யூத மக்கள் பாதுகாக்கப்பட்டார்கள். யூதருக்கு விரோதமாக இருந்த ஆமோன் தான் உருவாக்கிய தூக்கு மரத்திலே தூக்கிடப்பட்டான்.

**யோனா இறைவாக்கினரும் நினிவே மக்களும் : –**

நினிவேயின் பாவம் ஆண்டவர் சமூகத்தில் கூக்குரல் இட்டது. ஆண்டவர் இறைவாக்கினர் யோனாவை அனுப்புகிறார். யோனா மறந்து நினிவேக்கு போகாமல் தர்ஷிசுக்கு போக கப்பலில் இருந்தது தூக்கி வீசப்பட ஒரு மீன் யோனாவை விழுங்குகிறது. மீன் வயிற்றில் யோனா மூன்று நாள் அல்லும் பகலும் மீன் வயிற்றில் இருந்தார். (யோனா 1–17) மீன் வயிற்றில் இருந்தவாறு ஆண்டவரிடம் மன்றாடினார். இக்கட்டு வந்த வேளையில் நான் உம்மை நோக்கி மன்றாடினேன். நான் உம்மை புகழ்ந்து பாடி உமக்கு நன்றி பலி செலுத்துவேன். மீட்பு அளிப்பவர் ஆண்டவரே என்று வேண்டிக் கொண்டார். ஆண்டவர் மீனுக்கு கட்டளையிட அது யோனாவை கரையிலே கக்கியது. யோனா நினிவேக்கு புறப்பட்டு போய் உரத்த குரலில் இன்னும் நாற்பது நாளிலே நினிவே அளிக்கப்படும் என்றார். நினிவே மக்கள் கடவுளின் செய்தியை நம்பி சிறியோர் முதல் பெரியோர் வரை நோன்பு இருந்து சாக்கு உடை உடுத்தி கொண்டனர். அரசனும் நோன்பு இருந்து சாக்கு உடை உடுத்தினான்.அரசன் கூறியதாவது ஒவ்வொருவரும் கடவுளை நோக்கி மன்றாட வேண்டும். தம் தீய வழிகளை விட்டுவிட வேண்டும். ஆடு மாடு விலங்குகள் கூட தண்ணீர் குடிக்ககூடாது நம்முடைய ஆண்டவர் தீங்கிற்கு மனஸ்தாபப்பட்டு நினிவே மக்களின் ஜெபத்தை கேட்டார். எனது பெயரை போற்றிடவும் என் மக்கள் சிறுமையுற்று (நோன்பு இருந்து) தங்கள் பாவங்களில் இருந்து மனம் வருந்தி இரந்து மன்றாடி என் திருமுகத்தை நாடினால் வானகத்தில் இருந்து நான் (ஆண்டவர்) அவர்களது மன்றாட்டுகளை கேட்டு அவர்கள் பாவங்களை மன்னிப்பேன். (குறிப்பேடு 7–14). நம்முடைய ஆண்டவர் தீங்கிற்கு மனஸ்தாபப்பட்டு நினிவே மக்கள் ஜெபத்தை கேட்டு அவர்கள் மேல் இருந்த பாவங்களையும் நுகங்களையும் நிந்தையையும் எடுத்துப்போட்டார்.

**-ரா.பங்ராஸ்,** ஆசிரியர்

# அந்த 40 நாட்கள்

நாம் மனந்திரும்பவும், நம்மை நாம் பரிசத்தப்படுத்திக் கொள்வதற்காகவும், கொடுக்கப்பட்ட அந்த 40 நாட்கள் தான் தவக்காலம். மனிதனுக்கு ஆவு, ஆத்மா, சரீரம் உண்டு. மனிதனை ஆளுகை செய்வது ஆத்மாதான். நல்லது, கெட்டது உலகம், தெய்வீகம் இவைகளைக் கண்டறிந்து விருப்பையும், வெறுப்பையும் வெளிப்படுத்துவது நம் ஆத்மாவே. எல்லோரும் பாவம் செய்து தேவ மகிமையை இழந்தார்கள் என்றும் ஒருவன் நான் பாவம் செய்வதில்லை என்று சொல்வானானால் அவன் பொய்யன் என்றும் வேதம் சொல்கிறது. ஆண்டவருடைய கண்களுக்கு மறைவானது எதுவுமேயில்லை. நம் பாவங்களே இறைவனின் ஆசீருக்குத் தடையாக உள்ளன. அதனால் தான் ஊதாரிமைந்தனின் உவமையை எடுத்துச் சொல்லி இறைவன் நம் மனந்திரும்புதலை விரும்புகிறார்.

உரோ 12-1 சிலுவையின் முன்னால் நம்மை நாமே சுய ஆய்வு செய்து பாவங்களை அறிக்கையிட்டு,விட்டுவிட்டு மனந்திரும்பி நம்மை இறைவனிடம் முழுமையாக அர்பணிக்க கொடுக்கப்பட்ட அந்த 40 நாட்கள் தவக்காலம். சுருங்கச் சொன்னால் நாம் பாவத்திற்கு மரித்துப் போகாதபடி மனம் மாறி பரிசுத்த வாழ்க்கை வாழ இறைவனோடு செய்து கொள்ளும் உடன்படிக்கை தான் அந்த 40 நாட்கள். இத்தவக்காலத்தில் ஜெபம், தவம், தானம் போன்ற நற்செயல்களில் நம்மை முழுவதுமாக இறைவனுக்கு ஒப்புக் கொடுக்க வேண்டும்.

ஜெபம் :

அன்னை ஜெபித்தது போன்று உள்ளார்ந்த ஜெபமாகவும் ஆயக்காரனைப் போல தாழ்ச்சியான ஜெபமாகவும், இறைவனுக்கு ஏற்புடைய ஜெபமாகவும் நாம் ஜெபிக்க வேண்டும் என இறைவன் நமக்கு அறிவுறுத்துகிறார்.

தவம் :

மனிதர் பார்க்கும்படி உபவாசம் இருக்காமல் முகத்தைக் கழுவி, தலையில் எண்ணெய் பூசி இறைவனுக்கு மட்டும் தெரியும் படியாக நம் உபவாசம் இருக்க வேண்டும்.

தானம் :

வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாத படிக்கு நம் தானம், தர்மச் செயல்கள் விளம்பரமில்லாமல் இறைவனுக்கு ஏற்புடையதாக அமைய வேண்டும். இதற்காக நமக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்புதான் அந்த 40 நாட்கள்.

ஆ.ஆ.7-12 குற்றச் செயல் புரிந்த மக்களை அழிக்கவும், வெள்ளப் பெருக்கிலிருந்து நோவா குடும்பத்தைக் காப்பாற்றவும், இறைவன் பெருமழை பெய்யச் செய்தது இரவும் பகலுமாக அந்த 40 நாட்கள்.

வி.ப.24-18 மோயீசன் 10 கட்டளைகளை இறைவனிடம் பெற்றுக் கொள்வதற்காக சீனாய் மலையில் தங்கியிருந்தது இரவும் பகலுமாக அந்த 40 நாட்கள்.

எ.ஆகமம் 13-25 ஆண்டவர் இஸ்ராயேல் மக்களுக்கு கொடுத்த கானான் தேசத்தை மோயீசன் அனுப்பிய ஆட்கள் உளவு பார்த்தது இரவும் பகலுமாக அந்த 40 நாடகள்.

எ.ஆகமம்14-33; தி.பா:-95-10 இஸ்ராயேல் மக்கள் கடவுளுக்கு எதிராக முறுமுறுத்து, நம்பிக்கை துரோகம் செய்ததால் கடவுள் அவர்களை/நாளை/

ஆண்டாக 40 நாட்களை 40 ஆண்டாக பாலைவனத்தில் அலைந்து திரியும்படி தண்டித்தார். வி.ப.16-35 இஸ்ராயேல் மக்கள் பாலைவனத்தில் 40 ஆண்டுகளாக கானான் சென்றடையும் வரை மன்னா உண்டு பிழைத்தார்கள்.

1 சாமு 17-16 இஸ்ராயேல் மக்களுக்கு எதிராக காலையிலும், மாலையிலும் பெலிஸ்தியன் சவால்விட்டது அந்த 40 நாட்கள்.

1அர 19-18 ஆண்டவரின் தூதர் தந்த உணவை உனக்கு வலிமை அடைந்த எலியா ஒரேபு மலையை அடைய நடந்ததுஇரவும் பகலுமாக அந்த 40 நாட்கள். யோனா 3-4 நினிவே மக்கள் தீஹ வழிகளிருந்து மனம் மாறி வாழ யோனா தீர்க்கதரிசி மூலம் இறைவன் கொடுத்த காலக் கெடு இரவும் பகலுமாக அந்த 40 நாடகள். இறைவன் கொடுத்த அந்த வாய்ப்பை பயன்படுத்தி மக்கள் மனம் மாறினார்கள். நெகே9-1 இஸ்ராயேல் மக்கள் உபவாசம் பண்ணி பாவ அறிக்கை செய்து ஆண்டவரைப் பணிந்தார்கள். யோவேல் :- 2-12 இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக் கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள் என்கிறார். ஏசாயா 58 இறைவனுக்கு ஏற்புடைய, உண்மையான உபவாசம் பிறரன்பு செய்வதே என கூறுகிறார் மத் :- 6-16,17,18 மனிதனுக்கு ஏற்ப அல்லாமல் இறைவனுக்கு ஏற்புடைய வகையில் உபவாசம் இருக்க வேண்டும் என்கிறார். மாற்கு :- 7-6 உள்ளம் உடைந்து, மனஸ்தாபப்பட்டு பாவ அறிக்கையிட்டு, மனந்திரும்பும் உபவாசமே கடவுளுக்கு பிரியமானதும் ஏற்புடையதுமே என்கிறார். மத் :- 4-2 இயேசு சோதிக்கப்படுமுன் உபவாசமிருந்தது இரவும் பகலுமாக அந்த 40 நாட்கள். ஆகவே ,அன்பார்ந்தவர்களே! நமக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வாய்ப்பாக அந்தநாட்கள் 40நாட்களை பயன்படுத்தி நாம் பாவங்களை விட்டு, மனம்மாறி ஜெபம், தவம், தானம் மூலமாக இறைவனோடு உறவு பொண்டு, இறை அன்பிலும், பிறரன்னிலும் வாழ, கொடுக்கப்பட்ட இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மனம் மாறுவோம். புது வாழ்வு அடைவோம். திருக்கல்யாண மாதவின் பிள்ளைகளாக நம் வாழ்வை அமைப்போம்.

- Y.V. **ராஜ் ,** சென்னை.

## பொன் மொழிகள்



| | |
|---|---|
| வருவதும் போவதும் | – இன்பம், துன்பம் |
| வந்தால் போகாதது | – புகழ்ச்சி, பழி |
| போனால் வராதது | – மானம், உயிர் |
| தானாக வருவது | – இளமை, மூப்பு |
| நம்முடன் வருவது | – பாவம், துக்கம் |
| தவிர்க்க முடியாதது | – பசி, தாகம் |
| நம்மால் பிரிக்கமுடியாதது | – பந்தம், பாசம் |
| அழிவைத் தருவது | – பொறாமை, கோபம் |
| எல்லோருக்கும் சமமானது | – பிறப்பு, இறப்பு |

- **டே. நிஜிதா,** வெள்ளக்கோவில்.

## கடந்த மாத கேள்வி-பதில் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்


| | |
|---|---|
| D.ஜோஸ்பின் மேரி தாசன் | கவரப்பேட்டை |
| W. பெமிலா வில்சன் | கவரப்பேட்டை |
| M. அனிதா ஜான்சன் | கவரப்பேட்டை |
| U.பெனிட்டா டோமினிக் | கவரப்பேட்டை |
| S.கீதா சுரேஷ் | கவரப்பேட்டை |
| A. அன்ன புஷ்பம் ராஜன் | கவரப்பேட்டை |
| T. சுகிர்தமணி அன்பரசன் | கவரப்பேட்டை |
| A. ஜோஸ்பின் அபிஷியா | கவரப்பேட்டை |
| A. ஜோசப் அரிஸ்டாட்டில் | கவரப்பேட்டை |
| U. எல்ஸி தினேஷ் | கவரப்பேட்டை |
| U.இமாகுலேட்சியோனா | கவரப்பேட்டை |
| U.ஆண்டனி அருண்ஜோசப் | கவரப்பேட்டை |
| A.அனுஷா அகஸ்டின் | கவரப்பேட்டை |
| W.கெவின் ரென்சி | கவரப்பேட்டை |
| லூர்து மேரி தேவசகாயம் | பிரகாசபுரம் |
| S.மலர்விழி செல்வகுமார் | தி.க. குன்றம் |
| F.தேவ சகாயம் | தி.க. குன்றம் |
| சு. பவித்ரா | ரெடில்ஸ் |
| ப. ரூபா | ரெடில்ஸ் |
| சு. கீர்திகா | ரெடில்ஸ் |
| ரா. சந்தியா | ரெடில்ஸ் |
| A.தெரஸ்வின்ராஜன் | பொற்பை |
| A.ஜான்ஸி சேகர் | பொற்பை |
| G. ரெஜினாள் மேரி | பொற்பை |
| S.மேரி லீலா | பொற்பை |
| A. நர்மதா ஜோஸ் | தோப்புவிளை |
| கபிரியேஸ் மேரி | பொற்பை |
| குயின் ரோஸ் பாக்கியம் | பொற்பை |
| தொ.மிக்கேல்ராஜ் கலா | மணப்பாடு |
| P. சந்தணதிரவியம் | பொற்பை |
| M.டேவிட்தேவராஜன் | வெள்ளகோவில் |
| S.நிர்மலா சந்தியாகுராஜன் | மார்க்கம்பட்டி |
| S.சிலுவை அந்தோணி | பொற்பை |
| A.பாத்திமா மேரி | கொழுந்தட்டு |
| D.ஜாக்கலின் டென்சன் | வெள்ளகோவில் |
| J.பீட்டர் ஜோசப் | சென்னை |
| P.ஸ்டெல்லாபீட்டர் | மாதர்பாக்கம் |
| J.புனிதா ஜெயக்குமார் | பொற்பை |
| G.ஜான் ஷீலா | ஏர்வாடி |
| S.ஜோஸ்லின் | பொற்பை |
| B.சிறிய புஷ்பம் | பொற்பை |
| S.பெலிக்ஸ் ஓயிட் | சென்னை |
| F.ஜெனபா ராணி | சென்னை |
| D.அந்தோணி ஏசுதாசன் | பொற்பை |
| P.புஷ்பமணி இராஜேந்திரன் | நெடுங்குளம் |
| ம.மேகலா மோனிகா | பொற்பை |
| I.அந்தோணி முத்து | அழகப்பபுரம் |
| S.ஜோஸ் பிரகாஷ் | பொள்ளாச்சி |
| மெரின்வளன் | நாகர்கோவில் |
| மெரிஷா வளன் | நாகர்கோவில் |
| R.வெனிஸ்டா ராஜேஸ் | ஏரல் |
| L.ஜாய்ஸ்ஆபிரகாம் | திருச்சி |
| C.சகாய சோனியா | பொற்பை |
| C.தனுஷியா | பொற்பை |
| S.சோனியா | பொற்பை |
| V.டெல்பின் | பொன்னேரி |
| A.அன்ட்ரின்வின்டா | பொன்னேரி |
| E.மோனிஷா | சென்னை |
| M.லிவிங்ஸ்டன் | பொற்பை |
| M.மரிய எப்சி | பொற்பை |
| M.லியோன் | பொற்பை |
| F.விஜய்காமராஜ் | பொற்பை |
| A.அந்தோனிஷைனி | பொற்பை |
| A.ஜெரிஷ் அந்தோணி ஜாக்ஸன் | பொற்பை |
| A.மேரி ஷாலினி | பொற்பை |
| A.மரிய லிட்வின் | அடைக்கலாபுரம் |
| A.மரிய மெர்லின் | அடைக்கலாபுரம் |
| J.நிதர்சன் | அடைக்கலாபுரம் |
| J.சாரோன் அருள்ராஜ் | நாகர்கோவில் |
| G.பூபால் | மதுரை |
| J.சுதா ராஜா | திருவான்மியூர் |
| J.சிலுவைக்கனி | திருவான்மியூர் |

## கடந்த மாத விவிலிய விடைகள்

1.சந்திப்புக் கூடார நுழைவு வாயில்
2.ஆசி வழங்கினார்
3.உசியேல்
4.எகிப்திலிருந்து
5.எட்டாம் நாள்
6.தூய்மையானவர்
7.கானான் நாடு
8.மேகத்தில்
9.ஏழாம் மாதம் பத்தாம் நாள்
10.உயிர்
11. தாய் தந்தைக்கு
12. எழுந்து
13. நடங்கள்
14. உண்ண
15. புனிதர்
16. ஏழு நாள்
17. ஏழு நாள்
18. தெளிவான ஒலிவ எண்ணெய்
19. யூபிலி ஆண்டு
20. தூயகத்துச் செக்கேலின் படி

# வாழ்வு தரும் வார்த்தைகள் – மார்ச் 2015

| தேதி | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|
| 1. | தவக்கால ஞாயிறு | தொ,நூ 22:1-2, 9-10-13, 15-18 | |
| | | உரோ8:31-34 | மாற் 9:2-10 |
| 2. | | தானி. 9:4-10 | லூக். 6:36-38 |
| 3. | | ஏசா 1:10,16-20 | மத். 23:1-12 |
| 4. | புனித கஸ்மீர் | எரே 18:18-20 | மத். 20:17-28 |
| 5. | புனித ஜான் ஆப் த கிராஸ் | எரே. 17:5-10 | லூக். 16:19-31 |
| 6. | | தொ.நூ. 37:3-4, 12-13,17-28 | மத்.21:33-43,45-46 |
| 7. | புனித பெர்பெத்துவா பெலிசித்தம்மாள் | மீக். 7:14-15, 18-20 | லூக் 15:1-3,11-32 |
| 8. | தவக்கால ஞாயிறு | வி.ப. 20:1-17 | |
| | | 1கொரி 1:22-25 | யோவா 2:13-25 |
| 9. | | 2 அர. 5:1-15 | லூக். 4:24-30 |
| 10. | | தானி. 3:25,34-43 | மத். 18:21-35 |
| 11. | | இச. 4:1,5-6 | மத்.5:17-19 |
| 12. | | எரே. 7:23-28 | லூக். 11:14-23 |
| 13. | | ஓசே. 14:2-10 | மாற். 12:28-34 |
| 14. | புனித மெட்டில்டா | ஓசே. 5:16-6:6 | லூக் 18:9-14 |
| 15. | தவக்கால ஞாயிறு | 2குறி 36:1-16,19-23 | |
| | | எபே 2:4-10 | யோவா 3:14-21 |
| 16. | | ஏசா. 65:17-21 | யோவா. 4:43-54 |
| 17. | புனித பேட்ரிக் | எசே. 47:1-9,12 | யோவா 5:1-16 |
| 18. | புனித ஜெருசலேம் சிரில் | எசா 49:8-15 | யோவா 5:17-30 |
| 19. | புனித யோசேப்பு | 2சாமு 7:4-5,12-14,16 உரோ. 4:13, 16-18,22 | மத். 1:16-18-2:24 |
| 20. | | நீதி. 2:1,12,22 | யோவா. 7:1-2,10,25-30 |
| 21. | | எரே. 11:18-20 | யோவா 7:40-52 |
| 22. | தவக்கால ஞாயிறு | எசே 31:31-34, | |
| | | எபி. 5:7-9 | யோவா 12:20-33 |
| 23. | | தானி 13:1-9,15-17,19-30,33-62 | யோவா 8:1-11 |
| 24. | புனித கத்ரீன் | எண் 21:4-9 | யோவா 8:21-30 |
| 25. | கிறிஸ்து பிறப்பு அறிவிப்பு | எசா 7:10-17,8:10 எபி 10:410 | லூக் 1:26-38 |
| 26. | | தொ.நூ 17:3-9 | யோவா 8:51-59 |
| 27. | | எரே 20:10-13 | யோவா 10:31-42 |
| 28. | | எசே 37:21-28 | யோவா 11:45-56 |
| 29. | குருத்து ஞாயிறு | மாற் 11:1-10 எசா 50:4-7 | |
| | | பிலி. 2:6-11 | மாற் 14:1-15,47 |
| 30. | | எசா 49:1-6 | யோவா 12:1-11 |
| 31. | புனித டேனியல் | எசா 49:1-6 | யோவா 13:21-33,36-38 |



# திருவிவிலியம் நமது செல்வம்

## விவிலிய வினா – விடை போட்டி

**பதில்கள் தேடவேண்டிய பகுதி : எண்ணிக்கை நூல் : அதிகாரம்1 முதல் 13 வரை**

1. இஸ்ரயேலின் தலைப்பேறான மகன் யார்?

2.எண்ண வேண்டாம் என சேர்க்கப்படாத குலம் எது?

3. யூத மக்களின் தலைவன் யார்?

4. லேவியர் தலைவர்களுக்கெல்லாம் தலைவன் யார்?

5. எந்த பொருந்தனை செய்தவர்கள் திராட்சை இரசம் அருந்தக் கூடாது?

6. நகசோன் கொண்டு வந்த வெள்ளி தட்டின் எடை என்ன?

7. நெத்தனியேல் கொண்டு வந்த பொன் பாத்திரத்தின் எடை என்ன?

8 .கமாலியேலின் தந்தை யார்?

9. ஆசேர் மக்களின் தலைவன் யார்?

10. ஏனானின் மகன் யார்?

11. நல்லுறவுப் பலி செலுத்துவதற்காக பெறப்பட்ட காளைகள் எத்தனை?

12. லேவியர் எத்தனை வயது முதல் சந்திப்பு கூடார வேளையின் பணிகளைச் செய்யலாம்?

13. இரவில் பாளையத்தின் மேல் பனிவிழும் போது ........... அதனுடன் விழுந்தது.

14. .உண்ண எங்களுக்கு ............... தாரும்.

15. இஸ்ரயேல் மூப்பரில் ................. பேரை என்னிடம் கூட்டிவா

16. பாளையத்தில் இறைவாக்கு உரைத்தவர் யாவர்?

17. ஆண்டவரின் வீடு முழுவதிலும் நம்பிக்கைக் குரியவனாக விளங்கிய அடியான் யார்?

18. மிரியாம் எத்தனை நாட்கள் பாளையத்துக்குப் புறம்பே விலக்கப் பட்டிருந்தார்?

19. உளவு பார்க்க யூத குலத்திலிருந்து அனுப்பப்பட்டவன் பெயர் என்ன?

20. திராட்சை குலை வெட்டப்பட்ட பள்ளத்தாக்கு எது?

**– P.ஆல்வின் அண்ணாமலை,**
தலைமை ஆசிரியர் (ஓய்வு).

**அடுத்த இதழ்**

**உயிர்ப்பு பெருவிழா சிறப்பிதழாக வெளிவரவிருக்கிறது.
இவைகளைப் பற்றிய கருத்துக்கள், கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன.
மேலும் விளம்பரங்களும் வரவேற்கப்படுகின்றன. படைப்புகள் வந்து**

**சேர வேண்டிய கடைசி நாள் : 15-03-2015**

**சந்தாதாரராக ஆகுங்கள் !** **அன்னையின் அருள் பெறுங்கள் !**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசிநாள் : 15.03.2015**

# திருத்தல வழிபாடுகள்

- ஒவ்வொரு மாதமும் முதல் சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை குணமளிக்கும் ஜெப வழிபாடு. 10.00 மணி முதல் 11.00 மணி வரை மலையாள மொழியில் திருப்பலி 11.00 மணி முதல் 12.00 மணி வரை ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு ஆலயத்தைச் சுற்றி திருக்கல்யாண அன்னையின் சப்பரப்பவனி. 12.00 மணிக்கு நவநாள் திருப்பலி நடைபெறும். தொடர்ந்து அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்படும். மாலை 4.00மணிக்கும் திருப்பலி நடைபெறும்.மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்
- மற்ற சனிக்கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு எரியும் மெழுகுவர்த்தியை கரத்தில் ஏந்தி ஜெபமாலை ஜெபித்துக்கொண்டு தேரோட்ட வீதியில் திருக்கல்யாண அன்னையின் சிறிய சப்பரப் பவனி நடைபெறும். அதைத் தொடர்ந்து நவநாள் திருப்பலியும், நோயாளிகளை மந்திரிக்கும் சடங்கும் நடைபெறும்.
- மாதத்தில் முதல் செவ்வாய் அந்தோணியார் கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் முதல் புதன் ஆலய வளாகத்தில் அமைந்துள்ள லூர்துமாதா கெபியில் மாலையில் திருப்பலி நடைபெறும்.
- மாதத்தில் இரண்டாவது புதன் காலை திருத்தலத்தில் திருப்பலி, மாலை நான்கு சந்தி கெபியில் திருப்பலி நடைபெறும்.

  மாதத்தில் முதல் வெள்ளி நோயாளிகளை வீட்டில் சந்தித்து நற்கருணை வழங்குதல்
- மற்ற நாட்களில் காலை 6.00 மணிக்கு திருப்பலி நடைபெறும்.
- மாதத்தின் முதல் வெள்ளி மற்றும் எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் மாலையில் திவ்ய நற்கருணை ஆசீர்வாதம் நடைபெறும்.

**இணையூர் வழிபாடுகள்.**

**நவமுதலூர்**

...னித

...ற்ப

வார நாட்களில் திருப்பலியும் நடைபெறும்.

## திருக்கல்யாணத்தாய் திருத்தலப் பெருவிழா

| | | |
|---|---|---|
| ஜனவரி 14 – | மாலை 6.00 மணி | திருவிழா கொடியேற்றம் |
| ஜனவரி 21 – | மாலை 6.00 மணி | சிறப்பு நற்கருணை பவனி |
| ஜனவரி 22 – | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசயத் தேர்பவனி<br>சிறப்பு மாலை ஆராதனை |
| ஜனவரி 23 – | காலை 6.00 மணி | திருவிழா திருப்பலி |
| | மாலை 6.00 மணி | அன்னையின் அதிசய தேர்ப்பவனி<br>நற்கருணை ஆசீர் |


புனித சூசையப்பர்